விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 30 ஞாயிற்றுக்கிழமை (15.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 239

# வடக்கு மாகாண அலுவலகங்களை

# கிளிநொச்சியில் இயக்கும் பணி நிறுத்தம்

## ஜனாதிபதி அதிரடி உத்தரவு

(கொழும்பு)

திருகோணமலையில் இயங்கும் வடக்கு மாகாண அலுவலகங்களைக் கிளிநொச்சியில் இயங்க வைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவும் சடுதியாக நிறுத்தப்பட்டுள்ளன. (16 ஆம் பக்கம் பார்க்க)



நல்லூர்க் கந்தனின் கொடியேற்றம் இன்று காலை 10 மணிக்கு

## தமிழ்க் கட்சிகளின் அரங்கம் மட்டக்களப்பில் கூடியது

(மட்டக்களப்பு)

தமிழ்க் கட்சிகள் அமைத்துள்ள தமிழ்க் கட்சிகளின் அரங்கம் நேற்று மட்டக்களப்பில் ஆரம்பமாகியுள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

குறைந்த வட்டி
அதிகூடிய பணம்
பவுணுக்கு
ரூ. 29,000 வரை
மாதாந்த வட்டி 1.16% மட்டுமே!
துரித இலக்கம்: 011 2353806
கொமேர்ஷல் வங்கியின் தங்க நகை அடகுச் சேவை
COMMERCIAL BANK
(C-876)

# கனடாவில் சரணாகதி அடைந்துள்ள 490 பேரிடம் விசாரணை இடம்பெறும்

## பொதுப் பாதுகாப்பு அமைச்சர் தகவல்

(கொழும்பு)

கனடாவில் சரணாகதியடைந்துள்ள புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்தப்படும் என அந்நாட்டுப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் விக்டொயிஸ் தெரிவித்துள்ளார்.

சுமார் 490 இலங்கையர் இவ்வாறு சரணாகதியடைந்துள்ளனர். இவர்களில் சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்கள் மற்றும் பயங்கரவாதிகள் இருக்கின்றார்களா? என்பது தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர்களைத் தமது அரசாங்கம் வரவேற்பதுடன் பயங்கரவாதிகளுக்கும் சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களுக்கும் கனடா ஒருபோதும் இடமளிக்காது என அவர் தெரிவித்துள்ளார்.

கனேடியக் குடிவரவு-குடியகல்வு சட்டம் மற்றும் பாதுகாப்புச் சட்டத்திற்கு அமைவாக விசாரணைகள் நடத்தப்படும். தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடிய அல்லது சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கையுடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவ (16 ஆம் பக்கம் பார்க்க)

## ★ மீள்குடியேறும் மக்களுக்கான ★ கொடுப்பனவு அதிகரிக்கப்படவுள்ளது

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இடம்பெயர் முகாம்களிலிருந்து மீள்குடியேறும் மக்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு உயர்த்தப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

மீள்குடியேறுவோருக்கு இதுவரையில் 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டதுடன் எதிர்வரும் காலங்களில் அந்தத் தொகை 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படவுள்ளது.

மனிக்பாம் இடம்பெயர் முகாமிலிருந்து சொந்த இடங்களில் மீள்குடியேறுவதற்கு முன்வரும் குடும்பங்களுக்கு இவ்வாறான கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அரசாங்க மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களினால் இந்தக் கொடுப்பனவுத் தொகை வழங்கும் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

ஏற்கனவே மீள் (16 ஆம் பக்கம் பார்க்க)

## விந்தையான தீர்ப்பு பொன்சேகா சிரிப்பு

(கொழும்பு)

முதலாவது இராணுவ நீதிமன்றத்தால் தனக்கு வழங்கப்பட்டிருக்கும் தீர்ப்பு மிகவும் விந்தையானது என்று முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இராணுவத்திலிருந்து கொண்டே அரசியலில் ஈடுபட்டார் என்ற வழக்கில் முதலாவது இராணுவ நீதிமன்றம் அவரைக் குற்றவாளியாகக் கண்டுள்ளது.

அவர் ஜெனரல் தரத்தில் இருந்து இறக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளது. ஆனால் இத் தீர்ப்பு மிகவும் நகைச்சுவைக்குரிய ஒன்று என்றார் பொன்சேகா.

இராணுவ சிரேஷ்ட தகைமையில் தன்னை விடக் குறைவானவர்களான விசாரணையாளர்கள் தன்னைச் சிரேஷ்ட தகைமையிலிருந்து இறக்க வேண்டும் என்று தீர்ப்பளித்திருக்கின்றார்கள் எனப் பொன்சேகா சுட்டிக் காட்டியுள்ளார். (ந-5)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...
சிங்கர் எயார்கண்டிஷனர்கள்
• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு
SINGER
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்
யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழ்க் கட்சிகளின் அரங்கம் விடுத்த அழைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிலளிக்க மறுப்பு

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் இணைந்து கலந்துரையாட வருமாறு விடுக்கப்பட்ட அழைப்பிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிலளிக்காமை குறித்து தமிழ்க் கட்சிகளின் அரங்கம் கவலை வெளியிட்டுள்ளது. தமிழ்க் கட்சிகளின் அரங்கம் ஐந்தாவது தடவையாக மட்டக்களப்பில் தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் கூடியது.

இக் கூட்டம் தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஒருமித்த தீர்மானத்திற்கு அமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு விடுக்கப்பட்ட அழைப்பிற்கு அக்கட்சி உத்தியோக பூர்வமான முறையில் பதிலளிக்காமை குறித்து இவ்வரங்கம் தமது கவலையை வெளிப்படுத்துவதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான கதவுகள் இன்னமும் திறந்தே இருக்கின்றது என்பதைத் தெரிவிக்கின்றது.

இன்றைய தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் தமிழ்மக்கள் எதிர்நோக்குகின்ற உடனடித் தேவைகள் குறித்து அதிக கவனம் செலுத்தி ஆராயப்பட்டதுடன் அவற்றை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று விரைவில் தீர்வைப் பெற்றுக் கொடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இக் கூட்டத்தில்

❖ அர்த்தமுள்ள மீள்குடியேற்றம்

❖ உட்கட்டமைப்புடன் கூடிய மீள் கட்டுமானம்

❖ உயர் பாதுகாப்பு வலயங்கள், மீள்குடியேற்றங்கள்

❖ மக்களின் வாழ்விடங்களில் அமைக்கப்பட்டு வரும் இராணுவக் குடியேற்றங்கள்

❖ முழுமையான சிவில் நிர்வாகத்தினை ஏற்படுத்துதல்

❖ ஆயுதப் போராட்டத்தினால் உடைமைகளை உறவுகளை அங்கங்களை இழந்த மக்களுக்கு நட்ட ஈடுகளை பெற்றுக் கொடுத்தல்

❖ வடக்குக் கிழக்கு உட்பட தமிழ்பேசும் பகுதிகளில் இனப் பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளைத் தளர்த்துதல்

❖ யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் கடைப்பிடிக்கப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகளைத் தளர்த்துதல்

❖ மீள் குடியேற்றத்தை வெளிப்படையாகச் செய்வதுடன் அதற்கு மக்கள்பிரதிநிதிகள் சர்வதேச உள்ளூர் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளல்

ஆகிய விடயங்கள ஆராயப்பட்டன.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மாகாண சபைகளுக்கென பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்ற அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துதல் ஆரோக்கியமான முன் முயற்சியாக அமையும் என தீர்மானிக்கப்பட்டது.

அடுத்து வரும் கூட்டங்களில் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் முஸ்லிம் மற்றும் மலையக கட்சிகளை இணைப்பது குறித்து ஆராயப்படும். தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியற் கைதிகள் இறுதி யுத்தத்தின்போது சரணடைந்து கைது செய்யப்பட்டுள்ள போராளிகளின் விபரங்களை வெளிப்படுத்துவதுடன் அவர்களின் விடுதலைக்கு ஆக்க பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளவும் இக் கூட்டத்தில் தீர்மானங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக இதில் கலந்துகொண்ட ஒன்பது தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் கையொப்பமிட்டு அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

தமிழர் விடுதலைக கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கட்சித் தலைவரும் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சந்திரகாந்தன், ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம், தந்தை செல்வாவின் மகனும் ஈழ ஏதிலியர் மறு வாழ்வுக் கழகத்தின் தலைவருமான எஸ்.சி. சந்திரஹாசன், ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரதிநிதி இரா.துரைரத்தினம், ஸ்ரீ ரெலோ பிரதிநிதி பி.உதயராசா மற்றும் புளொட் கூட்டமைப்பின் இ.இராகவன் ஆகியோர் இந்த அறிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர்.

(ந-5)

## இன முரண்பாடு இல்லையெனில் இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் அவசியமில்லை

## சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எல்.குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் இன முரண்பாடு இல்லையென்றால் இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுக்கான அவசியம் கிடையாது என சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். எல்.குணசேகர தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்கான முறையைத் தவிர மரபு ரீதியான அரசியல் வாதிகளுக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையில் வேறு வித்தியாசங்கள் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அநேகமான இன ரீதியான அரசியல் கட்சிகள் மக்கள் நலனை கருத்திற்கொள்வதில்லை எனவும் சுயலாப நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு செயற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மெய்யான நாட்டம் காட்டவில்லை எனவும் இதன் காரணமாகவே 2002 ஆம் ஆண்டு யுத்தநிறுத்தம் வெற்றியளிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தங்களைப் வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் புலிகள் பல சந்தர்ப்பங்களில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்ததாகவும் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் அப்பாவிப் பொது மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்திக் கொண்டனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அரசாங்கம் பாரிய ஆயுதங்ளைக் கொண்டு தாக்குதல் நடத்தவில்லை எனவும் இதனால் படையினரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரப்பகிர்வின் மூலம் நாட்டின் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் எனவும் கூறியுள்ளார்.

(6-2)



நல்லூரிலுள்ள செங்குந்த மரபினரால் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் இன்று நடைபெறும் கொடி யேற்றத்திற்கான கொடிச்சீலை அழகிய தேரில் ஊர்வலமாக எடுத்து வருவதற்கான பூஜை வழிபாட்டின் போது...

## அழகுக்கலை நிபுணர்களாக பயிற்சி பெற்ற புலி உறுப்பினர்கள் விடுவிக்கப்படவுள்ளனர்

புனர்வாழ்வு முகாம்களில் அழகுக் கலை நிபுணர்களாக பயிற்சி பெற்ற முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் விடுதலை செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

37 முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு இவ்வாறு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

விடுதலை செய்யப்படவுள்ள இந்த அழகுக்கலை நிபுணர்கள் அனைவரும் 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் என குறிப்பிட்டுள்ளார். எவ்வாறெனினும் இறுதிக்கட்டப் போராட்டத்தின் போது குறித்த உறுப்பினர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த வயதுப் பிரிவைச்சேர்ந்த இறுதிக் குழாம் விடுதலை செய்யப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளதுடன் மணப்பெண் அலங்காரம் மற்றும் சிகை அலங்காரம் ஆகியன தொடர்பில் குறித்த முன்னாள் விடுதலைப்புலி போராளிகளுக்கு விசேட பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

(6-2)




இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிட வல்லுனர்

கங்காதரன் சாஸ்திரி
077 0712537

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்

கை ரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப்பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் செய்து தரப்படும்

இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்

121 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகாமையில்)

(2178)

கைரேகை பார்க்கும் நேரம்:
காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை பார்க்கப்படும்





செல்லா சினிமா (நாதன்ஸ்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
காட்சி நேரம்:- 10.30,2.30,6.00,9.00



**Study in Canada**

கனடாவில் அங்கீகாரம் பெற்ற கல்லூரியில் சகல கற்கை நெறிகளுக்குமான புதிய விசா நடைமுறைகளிற்கு அமைய student visa செய்து தரப்படும்.

canadore college

அக் கல்லூரிகளால் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஆசிரியர் ஒருவரினால் ஆலோசனை வழங்கப்பட்டு பதிவுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

*After O/L, A/L Pass*

2011 *January* ஆரம்பமாகவுள்ள இக் கற்கை நெறிக்கான பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்.

**SAI Institute of Computer Studies**
**Colombo & Jaffna**

*Suren* 0789141904
*Aikan* 077 8445952

(2180)



சேவை முகவர்

**காணிகள், வீடு விற்பனைக்கு**

சுந்தர்மடம், மணல்தறைலேன், வைமன் றோட், நல்லூர், மருதடி வீதி, பொற்பதி வீதி, பழம்றோட், கோண்டாவில், திருநெல்வேலி, 4, 3, 11/4, 2 பரப்பு அளவுகளில் நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் விற்கவிரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : V.சுந்தரம்
222 9177
0714624830 (2112)

**விற்பனைக்கு**

கடைக்குத் தேவையான றாக்கிகள், மூடியுடன் கண்ணாடிப் பெட்டிகள், நிறையுடன் தராசு மலிவு விலையில் விற்பனைக்கு நல்லூரில் உள்ளது.
தொடர்பு
0789369742
(2154)

**வேலைவாய்ப்பும் நேர்முகத்தேர்வும்**

கிளை முகாமையாளர் (BRANCH MANAGER) சந்தைப்படுத்தல் அதிகாரி (MAKETING EXECUTIVE) ஆலோசகர்கள் (COUNSELORS) ஆகிய பணியாளர்களுக்கு 21.08.2010 சனி காலை 8.30 இற்கு இல 644, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நேர்முகத் தேர்வு (ஆட் தெரிவு) இடம்பெறும். குறித்த பணியில் இணைய விரும்புவோர் தகுந்த சான்றுப் பத்திரங்களுடன் நேரில் வரவும்.
(2175)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பெருங்காடு சந்தையடி அருள்மிகு கதிர்காமக் கந்தன் தேவஸ்தான அலங்கார உற்சவம் நேற்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெற்று 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை தீர்த்த உற்சவத்துடன் திருவிழா நிறைவு பெறவுள்ளது. (6)

★ ★ ★

சாவகச்சேரி வடக்கு அருள்மிகு ஆதி சிவ வீரபத்திர சுவாமி ஆலய அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை அலங்காரக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ளது.

உற்சவத்தில் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாம்பழத்திருவிழாவும், 21 ஆம் திகதி சனிக்கிழமை திருத்தொங்கல் உற்சவமும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முத்துச்சப்பறத்திருவிழாவும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது.

இதேவேளை 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் சமய தீட்சை ஞான உபதேசம் வழங்கும் வைபவம் இடம்பெறும் எனவும் உற்சவகால சிறப்பு நிகழ்வாக இன்று ***சைவ வாழ்வியலில் திருப்பணி*** எனும் கருப்பொருளில் சைவப் புலவர் ஆசிரியர் கு.சுமுகலிங்கம் சொற்பொழிவாற்றவுள்ளார். (6-29)

# நூறாவது அகவை நிறைவு விழாவும் மலர் வெளியீட்டு விழாவும்

(யாழ்ப்பாணம்)

இணுவில் சைவ மகாஜன வித்தியாலய முன்னாள் அதிபர் அமரர் வயித்திலிங்கம் நடராசாவின் நூறாவது அகவை நிறைவு விழா எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 6.30 மணிவரை முனைவர் ஸ்ரீமத் குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் முன்னிலையில் இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இணுவில் மத்திய கல்லூரி அதிபர் அருளானந்தம் சதானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் முற்பகல் 10.20 மணிக்கு நூற்றாண்டு நினைவு மலரை பிரதம விருந்தினர் ப. விக்னேஸ்வரன் வெளியிட்டு வைக்க முதற் பிரதியை அண்ணா நிறுவன உரிமையாளர் பொ. நடராசா பெற்றுக் கொள்வார் முற் பகல் 10.40 மணிக்கு "புதிய நூற்றாண்டில் தமிழ் மொழிக்கல்வி" நினைவுப் பேருரையை பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் காலாநிதி வல்லிபுரம் மகேஸ்வரன் வழங்கவுள்ளார். (6)

# நல்லூர் உற்சவகாலசேவை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தின் போது சேவையாற்றும் சகல சாரணர்களையும் சகல சாரண ஆசிரியர்களையும் உதவி மாவட்ட ஆணையாளர்களையும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் ஒன்று கூடுமாறு யாழ். மாவட்ட ஆணையாளர் ஜீ.செபஸ்தியாம்பிள்ளை அறிவித்துள்ளார். (6-2)

# 'வேலாயுதா' இறுவட்டு வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சக்தி எப்.எம் இன் ஏற்பாட்டில் நல்லூர்க் கந்தனின் பெருமை கூறும் "வேலாயுதா" இறுவட்டு இன்று மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

இப் பாடல்களை தென்னிந்தியாவின் பிரபல பின்னணிப் பாடகர்களான ரி.எம். சௌந்தரராஜன், திருமதி. பி.சுசிலா ஆகியோர் இணைந்து பாடியுள்ளனர். பாடலாசிரியர் சிம்மனின் வரிகளால் அமையப் பெற்ற இப்பாடல்களுக்கு சத்யன் மகாலிங்கம் இசையமைத்துள்ளார். (6)

# கிளிநொச்சி பாடசாலை அதிபர்களின் கவனத்திற்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வலயப் பாடசாலை அதிபர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பரீட்சார்த்திகளிற்குரிய சுட்டெண்களை வழங்குவதற்காக எதிர்வரும் 18, 19 ஆம் திகதிகளில் காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை தத்தமது பாடசாலைகளில் கடமையில் இருக்க வேண்டும் என கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (6)

# உரிமை கோரப்படாத சடலங்களை உரியவர்கள் பொறுப்பேற்கவும்

அச்சுவேலியைச் சேர்ந்த வி.பொன்னுச்சாமி (வயது 76) என்பவரதும், நவாலி வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த என்.கனகாம்பிகை (வயது 63) ஆகியோரினதும் சடலங்கள் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் உள்ளன.

இருவரது சடலங்களையும் இதுவரை எவரும் உரிமை கோரப்படாது இருப்பதால், உரித்துடையோர் மூன்று தினங்களுக்குள் பொறுப்பேற்கும்படி யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6-2)

# இராசி பலன்

15-08-2010
(ஆடி 30, ஞாயிற்றுக்கிழமை)
சஷ்டி முன்னிரவு 7.48 மணிவரை
சித்திரை பிற்பகல் 1.38 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
நல்லூர் கந்தன் கொடியேற்றம்,
சஷ்டி விரதம்.

**மேடம்** சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும், தொலைபேசி மூலம் மகிழ்ச்சியான செய்தி வந்து சேரும், ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்க வேண்டி ஏற்படலாம்.

**இடபம்** செல்வநிலை உயர அதிக பிரயாசை எடுப்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களிலிருந்து வருமானம் கிடைக்கும், இறை வழிபாட்டின் மூலம் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** வாகன யோகமுண்டு, சொத்துக்கள் வாங்க எடுத்த முயற்சி வெற்றியளிக்கும், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள்.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள், எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கும், வருமானம் பெறக்கூடிய வழிகளைக் கண்டு கொள்வீர்கள்.

**சிங்கம்** நினைத்தது நிறைவேறும் நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், நண்பர்கள் நல்ல ஒத்துழைப்பு வழங்குவர், பகைவர் விலகும்.

**கன்னி** ஆலய வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் முடித்து வெற்றி காண்பீர்கள், திடீர் பண வரவு மனதுக்கு சந்தோசம் தரும்.

**துலாம்** தொழில் ரீதியாகப் பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள், செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரும், சான்றோர்களின் சந்திப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்** பயணங்களால் பலன் கிடைக்கும், தூரதேசச் செய்தி ஒன்று மகிழ்ச்சியைத் தரும், உறவினர் வருகையுண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

**தனுசு** அதிஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரும் நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், உறவினர் வருகை மூலம் பெருமையடைவீர்கள்.

**மகரம்** பெண்களால் பெருமை வந்து சேரும் நாள், தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் மாறும், சொத்தொன்றை வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**கும்பம்** இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், மாலைநேரம் பிரியமானவர்களின் சந்திப்பு கிடைக்கும், தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள்.

**மீனம்** வரவை விட செலவுகள் கூடலாம், குடும்பத்தினருடன் கோபமாக பேசிவிட்டு பின்னர் வருத்தமடையும் சூழ்நிலை அமையும், பிரயாணங்களில் அவதானமாக நடந்து கொள்ள வேண்டிய நிலை.

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## பாடும் பறவைகள்

"என்ன சேர் கையில்?"

"பஞ்ச வர்ணக் கிளியை வளர்ப்பதற்காக வாங்கிக் கொண்டு போகிறேன்."

"பறவைகள் மீது உங்களுக்கு அவ்வளவு ஆர்வமா?"

"ஆமாம். பொதுவாக பறவைகள் என்றாலே எனக்கு ரொம்பப் பிரியம்"

"அப்படியா?"

"ஆம். பறவைகளின் பாடல்கள் இசைத்தட்டாக வெளிவந்திருக்கிறது. அது உங்களுக்குத் தெரியுமா?"

"எங்கே?"

"ஹங்கேரியில் ஒரு பறவையியல் நிபுணர் 30 வருடமாக பல்வேறு பறவைகளின் பாடல்களை பதிவு செய்து இசைத்தட்டாக வெளியிட்டிருக்கிறார். 1987 இல் இந்த இசைத்தட்டு வெளிவந்திருக்கிறது"

"ஆச்சரியமாக இருக்கிறதே..."

"பறவைகளின் குரல்களையும் பாடல்களையும் அவர் ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கிறார். மனிதர்களைப் போன்றே அவைகளும் தங்கள் இயல்பான குரலிலிருந்து பல மடங்கு உச்சஸ்தாயிக் குரலிலும் ஏற்ற இறக்கத்தோடு பாடுகிறதாம். 2500 விதமான பறவைகளின் குரலையும் பாடல்களையும் பதிவு செய்து பாதுகாத்து வைத்திருக்கிறாராம்.

"இவற்றையெல்லாம் கேட்கும் போது எனக்கும் பாடக்கற்றுக் கொள்ள வேண்டும் போல் தோன்றுகிறது"

"கவலைப்படாதீர்கள். கற்றுத் தருகிறேன்"

"அப்படியானால் உங்களுக்கும்?"

"ஆமாம். ஏற்கனவே எனக்கு ஓரளவு சங்கீத ஞானமுண்டு. வீணை வாசிப்பேன், அது தெரியுமா உங்களுக்கு?"

"அப்படியா?"

"ஆமாம். இந்த நிமிடம் கூட உங்களுக்கு முன்பாக என்னால் வாசித்துக் காட்ட முடியும்"

"அதெப்படி?"

"ஒரு கடதாசியில் வீணை என்று எழுதிக் கொடுங்கள். அதை வாசித்துக் காட்டுகிறேன்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 60-70 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 80 | 120 | 110 |
| தக்காளி | 70 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 60 |
| கோவா | 80 | 80 | 70 |
| கரட் | 100 | 120 | 110 |
| பூசணி | 40 | 50 | 50 |
| புடோல் | 30 | 40 | 60 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 50 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 60 |
| பாகற்காய் | 80 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 30 | 50 | 40 |
| கரணைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பயிற்றங்காய் | 90 | 100 | 140 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 80 | 60 |
| கறிமிளகாய் | 70 | 80 | 70 |
| முருங்கைக்காய் | 80 | 140 | 100 |
| போஞ்சி | 100 | 120 | 100 |
| கத்தரி தம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 20-25 | 30 | 25 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30 | 30 |

# கிளிநொச்சி மாவட்ட தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டை வழங்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் கல்விகற்று 2008,2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் , வவுனியா இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும் வேறு இடங்களிலும் தங்கியிருக்கும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் எதிர்வரும் 18 , 19 ஆம் திகதிகளில் தாங்கள் இடம்பெயர்விற்கு முன் கற்ற நிரந்தரப் பாடசாலை ஊடாக பரீட்சைக்கு விண்ணப்பித்திருப்பின் நிரந்தரப் பாடசாலையில் தங்களது பரீட்சைச் சுட்டெண்ணைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவ்வாறின்றி வேறு பாடசாலைகளினூடாக விண்ணப்பித்தவர்கள் தாம் விண்ணப்பித்த பாடசாலைகளில் தமது சுட்டெண்ணைப் பெற்றுக் கொள்ளலாம் என்று கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ரி.குருகுலராஜா தெரிவித்துள்ளார்.

மேலும் இதுவரை மீளத் திறக்கப்படாத கிளி/ சாந்தபுரம் கலைமகள் வித்தி, கிளி / தமிழ்ச் சோலை வித்தி,கிளி/யூனியன்குளம் அ.த.க.பா , கிளி / குஞ்சுக்குளம் கணேசா வித்தி, கிளி/ கண்ணகையம்மன் வித்தி , கிளி/ பல்லவராயன்கட்டு இ.த.க.பா , கிளி/இயக்கச்சி அ.த.க.பா , கிளி /கோவில் வயல் சி.சி.த.க.பா ,கிளி/முகாவில் அ.த.க.பா, கிளி/கிளாலி றோ.க.த.க.பா , கிளி/ அல்லிப்பளை சி.சி.த.க. பா.பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் மேற்குறித்த திகதிகளில் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தில் அவர்களது அதிபரூடாக சுட்டெண்ணைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் சுட்டெண் கிடைக்காத மாணவர்கள் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார்.

அத்துடன் பாடசாலைகளும் அவற்றிற்கான பரீட்சை நிலையங்களும் மேலே தரப்பட்டுள்ளன. அதற்கமைவாக மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுமாறும் அவர் கேட்டுள்ளார்.

# முன்பள்ளி விளையாட்டு விழா

மல்லாகம் கல்லாரை வளர்மதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வளர்மதி சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

வளர்மதி சனசமூக நிலைய தலைவர் ஐ. சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மானிப்பாய் வலி கொத்தணி தலைவர் கே. மெய்யழகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (6)


# நவாலி நெற்பயிர்ச் செய்கையாளருக்கு உரமானியத்திற்கான பதிவு

(நவாலி)

நவாலி வடக்கு விவசாயிகள் சம்மேளனத்தினால் காலபோக நெற் செய்கை உர மானியத்திற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சம்மேளனச் செயலாளர் ஆ. யோகானந்தன் தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பதிவினை மேற்கொண்டவர்களுக்கு பதிவின்படி வழங்கப்படும் எனவும் புதிய பதிவுகளை மேற்கொள்பவர்கள் தமது நெற்காணி உறுதியினை சமர்ப்பிப்பதன் மூலம் பதிவு மேற்கொள்ளப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6-2)


## ஸ்ரீ மத் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 25 ஆவது குரு பூசை தின நிகழ்வு



காலம் : 15.08.2010 (ஞாயிற்றுக்கிழமை)

இடம் : சந்நிதியான் ஆச்சிரமம்

விசேட நிகழ்வு : இசைச் சொற்பொழிவு

"குருவாய் வருவாய்" (பக்கவாத்திய சகிதம்)

வழங்குபவர் : திரு. க.ஆனந்தராசா (அன்னைதாசன்) அவர்கள்

வழமைபோல் ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூசை அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து ஆச்சிரம மண்டபத்தில் குரு பூசை நிகழ்வுகள் இடம் பெறும்

அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வச் சந்நிதி,
தொண்டைமானாறு.

சந்நிதியான் ஆச்சிரமம்

(சி-860)


## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பித்த பாடசாலைகளும் அவற்றுக்கான பரீட்சை நிலையங்களும்

| பரீட்சைக்கு விண்ணப்பித்த பாடசாலை | பரீட்சை நிலையம் |
|---|---|
| கிளி/ கனகபுரம் ம.வி. | கிளி/ கனகபுரம் ம.வி. |
| கிளி/கனகாம்பிகைக்குளம் ம.வி.<br>கிளி/ சிவபாதகலையகம் அ.த.க.பா.<br>கிளி/சாந்தபுரம் கலைமகள் வித்தி | கிளி /கனாம்பிகைக்குளம் ம.வி. |
| கிளி /கிளிநொச்சி மத்திய கல்லூரி | கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி |
| கிளி/பாரதி வித்தி<br>கிளி/தமிழ்ச்சோலை வித்தி | கிளி/பாரதி வித்தி |
| கிளி/கிளிநொச்சி ம.வி. | கிளி/கிளிநொச்சி ம.வி. |
| கிளி/ திருவையாறு ம.வி. | கிளி/திருவையாறு ம.வி. |
| கிளி/ புனித திரேசா பெண்கள் பாடசாலை<br>கிளி/ பன்னங்கண்டி இ.த.க.பா | கிளி/ புனித திரேசா பெண்கள் பா. |
| கிளி/ உருத்திபுரம் ம.வி.<br>கிளி/ சிவன்நகர் அ.த.க.பா.<br>கிளி/ புனித பற்றிமா அ.த.க.பா. | கிளி/ உருத்திபுரம் ம.வி. |
| கிளி/கிளிநொச்சி இந்து ஆ.பா. | கிளி /கிளிநொச்சி இந்து ஆ.பா. |
| கிளி/ புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தி<br>கிளி/ஊற்றுப்புலம் அ.த.க.பா.<br>கிளி/செல்வாநகர் அ.த.க.பா. | கிளி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தி பரீட்சை நிலையமானதுமிதிவெடி அபாயம் காரணமாக கிளி/செல்வாநகர் அதகபாடசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளது. |
| கிளி/ அக்கராயன் அ.த.க.பா.<br>கிளி/யுனியன் குளம் அ.த.க.பா | கிளி/ அக்கராயன் அ.த.க.பா |
| கிளி/ வன்னேரிக்குளம் ம.வி.<br>கிளி/ ஆனைவிழுந்தான் அ.த.க.பா.<br>கிளி/ குஞ்சுக்குளம் கணேசா வித்தி<br>கிளி/ஐயனார்புரம் அ.த.க.பா. | கிளி/வன்னேரிக்குளம் ம.வி. |
| கிளி/ அக்கராயன் ம.வி.<br>கிளி/ கண்ணகைபுரம் அ.த.க.பா.<br>கிளி/ஸ்கந்தபுரம் இல.1.அ.த.க.பா.<br>கிளி/ ஸ்கந்தபுரம் இல.2 அ.த.க.பா. | கிளி/ அக்கராயன் ம.வி. |
| கிளி/பூநகரி நல்லூர் ம.வி.<br>கிளி/கறுக்காய்தீவு அ.த.க.பா.<br>கிளி/சாமிப்புலம் அ.த.க.பா.<br>கிளி/செல்வாலீயாதீவு அ.த.க.பா.<br>கிளி/ஞானிமடம் அ.த.க.பா.<br>கிளி/முக்கம்பன் அ.த.க.பா. | கிளி/பூநகரி நல்லூர் ம.வி. |
| கிளி/வட்டக்கச்சி ம.வி.<br>கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா.<br>கிளி/வட்டக்கச்சி தெற்கு அ.த.க.பா. | கிளி/வட்டக்கச்சி ம.வி. |
| கிளி/இராமநாதபுரம் ம.வி.<br>கிளி/அழகாபுரி வித்தி.<br>கிளி/மாயவனூர் வித்தி | கிளி/ இராமநாதபுரம் ம.வி. |
| கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா.<br>கிளி/கல்மடுநகர் அ.த.க.பா. | கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா. |
| கிளி/முருகானந்த ம.வி.<br>கிளி/கண்டாவளை ம.வி.<br>கிளி/முரசுமோட்டை அ.த.க.பா.<br>கிளி/புனித அந்தோனியார் அ.த.க.பா. | கிளி /முருகானந்த ம.வி. |
| கிளி/பரந்தன் இந்து ம.வி.<br>கிளி/பரந்தன் அ.த.க.பா | கிளி/பரந்தன் இந்து ம.வி. |
| கிளி/தருமபுரம் ம.வி<br>கிளி/கல்வெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தி<br>கிளி/நாகேந்திரா வித்தி.<br>கிளி/பெரியகுளம் ஐயனார் வித்தி<br>கிளி/தருமபுரம் இல1 அ.த.க.பா<br>கிளி/கட்டைக்காடு அ.த.க.பா<br>கிளி/தம்பிராசபுரம் அ.த.க.பா | கிளி/தருமபுரம் ம.வி |
| கிளி/பிரமந்தனாறு ம.வி<br>கிளி/கண்ணகை அம்மன் வித்தி<br>கிளி/ புன்னைநீராவி அ.த.க.பா<br>கிளி/மயில்வாகனபுரம் அ.த.க.பா<br>கிளி/உமையாள்புரம் அ.த.க.பா<br>கிளி/ குமாரசாமிபுரம் அ.த.க.பா<br>கிளி/கல்லாறு தமிழ் வித்தி | கிளி/பிரமந்தனாறு ம.வி |
| கிளி/ஜெயபுரம் ம.வி<br>கிளி/கரியாலை நாகபடுவான் இல 3 அ.த.க.பா<br>கிளி/பல்லவராயன் கட்டு இ.த.க.பா | கிளி/ஜெயபுரம் ம.வி |
| கிளி/வேரவில் இந்து ம.வி.<br>கிளி/கிராஞ்சி அ.த.க.பா<br>கிளி/வலைப்பாடு றோ.க.த.க.பா | கிளி/வேரவில் இந்து ம.வி. |
| கிளி/ பூநகரி ம.வி<br>கிளி/பரமன்கிராய் அ.த.க.பா<br>கிளி/பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தி<br>கிளி/வினாசியோடை அ.த.க.பா<br>கிளி/செம்பன்குன்று அ.த.க.பா<br>கிளி/தம்பிராய் அ.த.க.பா | கிளி/பூநகரி ம.வி |
| கிளி/முழங்காவில் ம.வி<br>கிளி/இரணைதீவு றோ.த.க.பா<br>கிளி/கரியாலை நாகபடுவான் இல 2 அ.த.க.பா | கிளி/முழங்காவில் ம.வி |
| கிளி/நாச்சிக்குடா அ.த.க.பா<br>கிளி/குமுழமுனை அ.த.க.பா | கிளி/நாச்சிக்குடா அ.த.க.பா |
| கிளி/பளை மத்திய கல்லூரி<br>கிளி/இயக்கச்சி அ.த.க.பா<br>கிளி/கோவில்வயல் சி.சி.த.க.பா<br>கிளி/மாசார் அ.த.க.பா<br>கிளி/முகாவில் அ.த.க.பா<br>கிளி/பளை றோ.க.த.க.பா<br>கிளி/சோரன்பற்று கணேசா வித்தி<br>கிளி/தர்மக்கேணி அ.த.க.பா<br>கிளி/கிளாலி றோ.க.த.க.பா<br>கிளி/சோரன்பற்று சி.சி.த.க.பா<br>கிளி/அல்லிப்பளை சி.சி.த.க.பா | கிளி/பளை மத்திய கல்லூரி |

# யதார்த்த நிலையை பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தும் கருத்தரங்குகள்

## ஐ.தே.க. ஏற்பாடு

(கொழும்பு)

நாட்டின் யதார்த்த நிலையை பொது மக்களுக்குத் தெளிவுபடுத்தும் கருத்தரங்குகளை அடுத்தமாதம் ஆரம்பிக்கவுள்ள தாக ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

இது குறித்து ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கருத்துத் தெரிவிக்கையில் ,

தேர்தல் தொகுதிகளின் அடிப்படையில் இந்தக் கருத்தரங்குகள் இடம் பெறவுள்ள தாகவும் இதன் போது அரசாங்கத்தின் இன்னல்கள் மற்றும் செயற்பாடுகளை நாட்டிற் குத் தெளிவுபடுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அரசாங்கம் உண்மையான காரணங்களை மறைக்கும் வண்ணம் பொது மக்களுக்கு மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டு வருவதாக அவர் இதன் போது சுட்டிக் காட்டியுள்ளார். (6)

# றம்புட்டான் பறிக்க முயன்ற இரு சகோதரிகள் பலி

(கொழும்பு)

றம்புட்டான் பழங்களை பறிப்பதற்கு முயன்ற ஒரே குடும்பத்தை சேர்ந்த இரு சகோதரிகள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று காலை இரத்தினபுரி லல்லிப்பிட்டிய பற்றேதான பகுதியில் இடம்பெற்றுள்ளது.

14 மற்றும் 9 வயதுடைய இரு சகோதரிகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

தமது வீட்டுத்தோட்டத்தில் உள்ள றம்புட்டான் மரத்தில் இருந்து பழங்களை பறிப்பதற்கு சென்ற இவர்கள் மின்சார தாக்கத்திற்கு இலக்காகியுள்ளனர்.

இதேவேளை இந்த இரண்டு சிறுமிகளையும் காப்பாற்றுவதற்கு முயன்ற உறவினரான சகோதரி ஒருவர் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகி மிகவும் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

# நாவற்குழி வீட்டுத்திட்ட பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(கொழும்புத்துறை)

நாவற்குழி 300 வீட்டுத் திட்டப்பகுதியில் இலங்கை இராணுவத்தினர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

வெற்றுக்காணிகளை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தல் மற்றும் குன்றும் குழியுமாகவுள்ள பகுதிகளை நிரப்பியும் வருகின்றனர்.

அத்தோடு டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு பற்றி நேரில் சென்று அறிவுறுத்தியும் வருகின்றனர்.

குறிப்பாக நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வசித்து வரும் போலியோ தாக்கத்திற்குள்ளான குடும்பத்தினர் ஒருவருக்கு சுய தொழிலை மேம்படுத்தும் முகமாக இராணுவத்தினரின் அனுசரணையில் கடை ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (6-2-51)

# தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஐந்து ஊழியர்கள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

நிதி மோசடி தொடர்பாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 5 ஊழியர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். அதிகார சபையின் நலன்புரிச் சங்கத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் நிதி மோசடி தொடர்பாக இவர்கள் பணியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

நலன்புரி சங்கத்தின் வருடாந்த வரவு-செலவு மற்றும் நிதியறிக்கை என்பன 5 வருடங்களாக சமர்ப்பிக்கப்படாமை தொடர்பான தகவல்கள் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய இந்த நிதிமோசடி தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பு குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அத்துடன் ஊழியர்கள் தொடர்பாக உள்ளக கணக்கியல் பிரிவிலும் விசாரணைகள் இடம் பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)

# ஸ்ரீ பகவதி அம்மாவின் 56 ஆவது ஜென்மதின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தினரால் நடத்தப்படும் ஸ்ரீபகவதி அம்மாவின் 56 ஆவது ஜென்ம தின நிகழ்வு இன்று ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு காரைநகர் மத்தி லுக்காடில் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஸ்ரீ அம்மா பகவான் பாத பூசை நிகழ்வும் முக்தி தீட்சை வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதால் அடியார்கள் அனைவரும் கலந்து கொண்டு ஸ்ரீ அம்மா பகவானின் ஆசியினை பெற்றுக் கொள்ளுமாறு பிரார்த்தனை மையத்தினர் கேட்டுக்கொள்கிறனர். (2-4)

# சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ். நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலய சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நாளை திங்கட்கிழமை வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் விசேட பூசை வழிபாடுகள் பஜனையுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் சொற்பொழிவுகளும் இடம்பெறுமென யாழ்.நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (6-2)

✠ ✠ ✠

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் பூசையைத் தொடர்ந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குருபூசை வைபவத்தை கொண்டாவுள்ளனர்.

நாயன்மார் நால்வருக்கு அபிஷேக ஆராதனை வழிபாடுகள் நடைபெற்று சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளிய திருப்பதிகங்கள் பாராயணம் நடைபெறும். இதற்கான ஒழுங்கை மன்ற அமைப்பாளர் கி.கிருஷ்ண மூர்த்தி மேற்கொண்டுள்ளார். (6)




## தெய்வீக இசை அரங்க சிறப்பு நிகழ்ச்சி

யாழ். புங்குடுதீவு கிழக்கு கலட்டி வரசித்தி விநாயகர் ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் ஸ்ரீமதி விஜயலெட்சுமி அம்மாவின் பேரனும் கிருஷ்ணராஜக் குருக்கள் ஜானகி அம்மாவின் கனிஷ்ட புத்திரனும், ஈழத்து இசை மேதை சங்கீத பூஷணம் பொன் சுந்தரலிங்கத்தின் பிரதம சீடனும் கனடா டொறன்டோ இளங்கலைஞர் மன்றத்தின் முதல் மாணவன்

### கிருஷ்ணராஜ ரமணசர்மாவின்

இன்னிசைக் கச்சேரி நல்லூர் கொடியேற்றத்தன்று 15.08.2010 மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்வுக்கு அணிசேர் கலைஞர்களாக

திரு. S. கோபிநாத் - வயலின்
திரு. K.கஜன் - மிருதங்கம்
திரு. R. சிவராமன் - கஞ்சிரா
திரு. K.நந்தகுமார் - மோர்சிங்

வழங்கி சிறப்பிப்பர். இவர் மேன்மேலும் பல இசை நிகழ்வுகளை நிகழ்த்தி சிறப்புற வாழ வாழ்த்துகிறோம்.

குடும்பத்தினர்
கனடா டொறன்டோ இளங்கலைஞர்
மன்றத்தினர்.

## நல்லூரான் மகோற்சவத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மண்டபத்தில் ஆத்மீக சிந்தனை யுடன் நடத்தும் சமய சொற்பொழிவு மற்றும் கலைநிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி வரை தினமும் பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் சுப்பிரமணியம் உதயபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசு கலந்து சிறப்பிக்கவுள்ளார். இதில் இன்றைய தினம் ***இந்து சமய தர்மம்*** என்னும் விடயம் பற்றி பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

மேலும் புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசர் அறநெறிப் பாடசாலை, மாதகல் விநாயகர் அறநெறிப்பாடசாலை, சங்கானை வெல்வில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (6-4)

❖ ❖ ❖

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு தொடர்ந்து 27 நாட்கள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வின் ஆரம்ப வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளதுடன் ஆசி உரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ் சொற் செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறவுள்ளது. இதில் நாதஸ்வர கலைஞர்கள் கே.ஆர். சுந்தரமூர்த்தி, கே.ஆர்.எஸ்.தேவதாஸ் ஆகியோரும் தவில் கலைஞர்கள் கே.ஆர். எஸ். இராமதாஸ், ஆர். பாஸ்கரன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

தொடர்ந்து கிருஸ்ண ராஜக்குருக்கள் ரமணன் சர்மாவின் (பாட்டு), எஸ்.கோபிதாஸ் (வயலின் ),கே.கஜன் (மிருதங்கம்) ,ஆர்.சிவராமன் (கெஞ்சிரா), கே.நந்தகுமார் (முகர்சிங்) ஆகியோர் வழங்கும் தெய்வீக இசை அரங்கு நிகழ்வு இடம்பெறவுள்ளது. (6-4)

## லீக் போட்டிகளுக்கு தகுதி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் அழைக்கப்பட்ட யாழ். மாவட்ட முன்னணி கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டிகளில் அல்வாய் -மனோகரா, இளவாலை- ஜங்கென்றிஸ் மற்றும் குருநகர்- பாடுமீன் ஆகிய அணிகள் லீக் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளன.

கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற முதலாவது போட்டியில் புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து மோதிய அல்வாய் மனோகரா அணி 1:6 என்ற கோல்கணக்கிலும் கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற 2ஆவது போட்டியில் கொற்றாவத்தை சிவானந்தா எதிர்த்து மோதிய இளவாலை ஜங்கென்றிஸ் அணி 4:8 என்ற கோல் கணக்கிலும் மூன்றாவது போட்டியில் மணற்காடு சென் அன்ரனீஸ் அணியை எதிர்த்து மோதிய குருநகர் பாடுமீன் அணி 1:4 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்று லீக் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளன. (6-2-24)

## புலிகள் அமைப்பிற்கு உயிரூட்டும் நோக்கில் தங்கியிருந்ததாக பாக். பிரஜையிடம் விசாரணை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை மீள செயற்படுத்தும் நோக்கில் , தங்கியிருந்த குற்றச்சாட்டில் பாகிஸ்தான் பிரஜையிடம் விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சந்தேக நபரைத் தடுத்து வைத்து விசாரணை நடத்துவதற்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. யுத்தத்தின் மூலம் இல்லாதொழிக்கப்பட்ட புலிகள் அமைப்பிற்கு உயிர் கொடுக்கும் நோக்கில் குறித்த பாகிஸ்தான் பிரஜை கடந்த இரண்டு வருடங்களாக இலங்கையில் தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-2)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மேம்பாட்டு செயல்திட்ட செயலமர்வு நாளை திங்கட்கிழமை வேலணை கணனி வள நிலையத்தில் நடைபெறவுள்ளது. முதலாம் அணியில் பங்கு பற்றாத சகல அதிபர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு தீவக கல்வி வலய நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6)

## சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட உழவியந்திரம் மடக்கிப் பிடிக்கப்பட்டது

(கொழும்புத்துறை)

மணியந்தோட்டப் பகுதியிலிருந்து கடந்த 12 ஆம் திகதி சட்ட விரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த உழவியந்திரம் ஒன்று இராணுவத்தினரின் துவிச்சக்கரவண்டியுடன் மோதி விட்டு கொழும்புத்துறை வீதியூடாக சென்ற போது இராணுவத்தினரின் உதவியுடன் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டது.

மடக்கிப் பிடிக்கப்பட்ட குறித்த உழவியந்திரத்தின் உரிமையாளர் பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டதோடு அவரிட மிருந்து தண்டமும் அறிவிடப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை இப்பகுதியில் சட்டவிரோத முறையில் மணல் அகழ்வு நடவடிக்கை தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக குறிப்பிடப்படுகிறது. இந்நடவடிக்கைகளில் ஈடுபடும் வாகனங்கள் பொலிஸாரின் வருகை கண்டு மணல்களைப் பறித்துவிட்டு தலைமறைவாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-2-51)

## வடபகுதிக்கு கடல் உயிரின விருத்திக்கு மத்திய நிலையம்

(கொழும்பு)

வடபகுதியில் இறால், நண்டு மற்றும் மீன் இனங்களை விருத்தி செய்வதற்கான மத்திய நிலையமொன்றை அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆய்வுகளை நாரா நிறுவனம் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த மத்திய நிலையத்திற்காகச் செய்மதித் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தவது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டுள்ளதாக நாரா நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி கே.அருளானந்தன் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் அமுல்படுத்தப்பட்டால் வடபகுதியில் வாழும் மீனவர்கள் நன்மை அடைவார்களெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் மீன் உற்பத்தி அதிகரிப்பிற்கும் இது காரணமாக அமையுமென நாரா நிறுவனத்தின் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (6-2)

## தனியார் மருந்தகத்திற்கு எதிராக வழக்குத்தாக்கல்

நோயாளர்களுக்கு இலவசமாக விநியோகிக்க அரசாங்க வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட ஒரு தொகை மருந்துகள், புறக்கோட்டையிலுள்ள தனியார் மருந்தகத்தில் விற்பனை செய்யப்பட்ட போது கைப்பற்றப் பட்டுள்ளன.

தேசிய ஔடத அதிகார சபையின் விசேட விசாரணைக் குழுவொன்று கடந்த 12 ஆம் திகதி நடத்திய சுற்றி வளைப்பின் போது இம் மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. கண்டுபிடிக்கப் பட்ட மருந்து வகைகளில் இதய நோய்க்குப் பயன்படுத்தப்படும் டி. என். டி மருந்துகளும் மற்றும் நோய் எதிர்ப்பு மருந்துகளும் அடங்குகின்றன. இந்த மருந்துகளை தனியார் மருந்து விற்பனை நிலையத்துக்கு வழங்கிய நபர் தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டது.

இது தவிர குறிப்பிட்ட அளவுக்கு அமைய மருந்துகளை களஞ்சியப்படுத்தப்படாமை, காலாவதியான மருந்துகளை விற்பனை செய்தமை மற்றும் வைத்தியரின் மருந்துக் கடிதம் இன்றி மருந்து விற்பனை செய்தமை , உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குறித்த மருந்து விற்பனை நிலையத்திற்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-2-3)


ST.JOHN' S COLLEGE,JAFFNA.
CHUNDIKULI GIRL'S COLLEGE,JAFFNA.
ADMISSION-2011 FOR GRADE 1, GRADE 4, GRADE 6 & GRADE 10

ST JOHN'S COLLEGE JAFFNA · CEYLON

தரம் 01 , தரம் 04 , தரம் 06, தரம்10 இற்கான அனுமதி 2011

01. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.09.2010 முதல் 15.09.2010 வரை பெற்றுக் கொள்ளலாம்.
ஆ. எக்காரணம் கொண்டும் 15.09.2010 இற்குப் பின்னர் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா.
இ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
ஈ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 20.09.2010 வியாழக்கிழமை . அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
02. தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி ( போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்படவேண்டும்.
03. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும் , விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.
04. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 500.00.
05. வயதெல்லைகள்:
அ.தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2005 க்கும் 30.01.2006 க்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
ஆ. தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2002 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
இ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2000 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
06. தரம் 12 (A/L 2013 Batch) விண்ணப்பதாரி 01.02.1994 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
07. தரம் 04 ,தரம் 06 இற்கான பிரவேசப் பரீட்சை 09.10.2007 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

*குறிப்பு:*

01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.

02. தரம் 12 இற்கும்(A/L 2013 Batch) தமிழ்/ஆங்கில மொழி மூலம் கற்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் சென்.ஜோண்ஸ் கல்லூரியினால் ஏற்றுக் கொள்ளப்படும். அனுமதிப் பரீட்சை – 03.01.2011 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புக்கள் – 10.01.2011 ஆரம்பமாகும். ஆங்கில மொழி மூலக் கற்கைநெறி விஞ்ஞான ,கணித , வர்த்தக துறைகளுக்கு நடைபெறும்.

03. சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12 (A/L) (தமிழ்/ ஆங்கில மொழி மூலம் 2013 Batch) விண்ணப்பதாரிகள் (O/L) பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.

அதிபர்கள்.

(சி/861)

# பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் மின்வெட்டு காரணமாக பாதிப்பு

(மிருசுவில்)

தென்மராட்சி, மிருசுவில், உசன் மற்றும் கொடிகாமம் போன்ற பகுதிகளில் மாலை 6 மணி தொடக்கம் இரவு 9.30 மணிவரை மின்வெட்டு நடைபெறுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது க.பொ.த உயர்தரப் பரீட்சை நடைபெறுவதால், பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமது மீட்டல் கல்வியைத் தொடர முடியாதுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

எனவே, இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைக்கு உதவுமாறு பெற்றோர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (6-2)

# பிலிப்பைன்ஸ் நிறுவனத்தினால் டெங்கு மருந்து அன்பளிப்பு

(கொழும்பு)

டெங்கு நோயாளர்களின் குருதி நிணநீர் பிரசாரணத்திற்குத் தேவையான தற்சிறோன் போட் மருந்தை இலவசமாக இலங்கைக்கு வழங்க பிலிப்பைன்ஸ் நிறுவனமொன்று முன்வந்துள்ளது.

இதற்கமைவாக 400 போத்தல்கள் மருந்தை இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்க குறித்த நிறுவனம் முன் வந்துள்ளதாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்துகள் 5 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியானவையாகும். இதுதவிர உலக சுகாதார நிறுவனம் இதே வகையைச் சேர்ந்த ஆயிரத்து 200 மருந்துப் போத்தல்களை சுகாதார அமைச்சிடம் அண்மையில் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (6)

# வடபகுதி வைத்தியசாலைகளில் பணியாற்ற விசேட வைத்திய நிபுணர்கள் நியமனம்

(கொழும்பு)

வடபகுதி வைத்தியசாலைகளில் பணியாற்றுவதற்கென விசேட வைத்திய நிபுணர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் பயிற்சிகளை நிறைவு செய்து நாடு திரும்பும் விசேட வைத்திய நிபுணர்களுக்கு முதலில் வடபகுதி வைத்தியசாலைகளில் தற்காலிக நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றுமொரு தொகுதி வைத்தியர்கள் நாடு திரும்பியதும் அவர்களை வடக்கில் சேவைக்கு அமர்த்திவிட்டு, ஏற்கனவே அங்கு பணியாற்றியோரை நகர்ப்பகுதிகளில் நியமனம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மற்றும் பருத்தித்துறை ஆகிய வைத்தியசாலைகளுக்கு ஏற்கனவே விசேட வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி அஜித் மெண்டிஸ் கூறியுள்ளார்.

இந்தவைத்தியசாலைகளுக்குத் தேவையான சகல வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (6-2)

# கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன

(திருநெல்வேலி)


பார்க் நிறுவனத்தின் அனுசரணையுடன் வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு படகுகள் மற்றும் வெளியிணைப்பு இயந்திரங்கள் என்பன வழங்கப்படவுள்ளன.

இதில் மாமுனை, செம்பியன் தெற்கு, தாழையடி, உடுத்துறை, வத்திராயன், மருதங்கேணி, கட்டைக்காடு ,ஆழியவளை, வெற்றிலைக்கேணி ஆகிய பகுதிகளை சேர்ந்த கடற்தொழிலாளர்கள் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு விசேட ஊக்குவிப்பு கடன் திட்டத்தின் ஊடாக இந்த கடற்தொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாக கடற்தொழிலாளர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (6-4)



கிளிநொச்சி நகரப் பகுதியிலுள்ள உதயநகர் பிரதேசத்தில் டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டதையடுத்து கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சுகநலக் கல்வி வழங்கும் குழுவொன்றும் கரைச்சிப் பிரதேச சபையின் கழிவகற்றல் குழுவொன்றும் ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வை மேற்கொள்ளும் குழுவொன்றும் கிளிநொச்சி பொலிஸ் பணிமனையின் பிரதம தலைமைச் செயலகப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவொன்றும் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தை ஆரம்பித்தன.

# நல்லூரான் திருவடிக்கு இன்று கொடியேற்றம்




படங்கள் -அரவிந்

## வடிவேலன் நல்லூருக்கு வருகிறார்

கொடியேற்றம்! கொடியேற்றம்!! நல்லூரிலே கொடியேற்றம்!!!
கொடி கொடியாக அடியார்கள் கூட்டம்
படிகள் வரை உள்ளார்கள் பரவசத்தில்
முடிகளில் பூக்களுடன் பெண்கள் கூட்டம்
கொடிக் கம்பத்தைச் சுற்றி இருக்கையில்
நெடிய குருக்கள் தனது இருகைகளில்
தடிப்பான கொடியை கொடிக்கம்பத்தில் ஏற்றி
வடிவேலனை நல்லூர் கோயிலுக்குள் அழைக்கிறார்

கவிஞர் க.யோகராசா, அரியாலை

## இறையருளை வேண்டிடுவர்

அணிகலன்கள் ஆடைகள் ஆலயத்திற் கமைவாக
ஆசார சீலமுடன் ஆறுமுகன் சிந்தனையில்
அணியணியாய் அடிநடந்து அடியார்களின்று
ஆர்வமுடன் வந்து அழகன் அடிபணிந்து
புனிதப் புவிநல்லூர் படரும் புதுக்கொடியை
பூசித்துப் பூரித்துப் பெருமானின் அருளோடு
இனிவரும் நாலாறு இனியதிரு விழாக்களிலும்
இணைந்து இரந்து இறையருளை வேண்டிடுவர்!

குளப்பிட்டி க.அருமைநாயகம்

## ஐயனே நல்லையம்பதியுறையானே

ஐயனே நல்லையம்பதி மேவு மழகனே
அண்டினோர்க்கு உதவு பரனே
வையகம் தன்னிலே அகதியாய் அலைகின்ற
வாழ்விற்கு முடிவு இல்லையோ
தையலர் இருபாக முடையதோர் தேவனே
தயவுடைய முருகக் கடவுளே
'உய்யலாம் இனி நீவிர்' எனக்கரம் உயர்த்தியே
உயர்த்துவாய் உன்தன் கொடியே

கா.கார்த்திகேசு , நல்லூர்

## சேவற் கொடியேறுது!

கொடி ஏறுது! சேவற் கொடியேறுது!
கொள்ளையழகு பாரீர்!
கொடி போன்று குமரனிடம்
கொடை பெறவே வாரீர்!

அன்புக் கொடி அறிவுக் கொடி
அருள் கொடியும் அவனே!
பண்புக் கொடி சிவனொளியைப்
பற்றி நிற்க காணீர்

மனிதவுடற் கூறவற்றை
மரக் கொடியிற் காட்டி
இனிமை தரப் பறக்க விட்ட
இயல்புண்மை உணர்வீர் !

கவிஞர் செ.பரமநாதன், தாவடி

கொடியேற்றம் காணும் நல்லைக் குமரன்
திருவருள் அனைவருக்கும் கிடைக்கட்டும் !



சாரதி பயிற்சிப் பாடசாலை

தலைமைக் காரியாலயம்:-
இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:-021 2224353
0777225292

கிளை:- மகாத்மா வீதி,
நெல்லியடி.

# மத்திய வங்கியின் வெளியீடுகள் யாழ்.அலுவலகத்தில் கிடைக்கும்

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை, அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள், இலங்கையின் பொதுப்படுகடன் முகாமைத்துவம், நிதியியல் முறைமையின் இறுதியாண்டு அறிக்கை உள்ளிட்ட ஏனைய சஞ்சிகைகளையும் யாழ்ப்பாணத்தில் பெறக்கூடியதாவுள்ளது. இவற்றை இல.105, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கியின் மாகாண அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என மத்திய வங்கியின் வட மாகாண முகாமையாளர் இ.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

# 2010-ல் 1000 மில்.டொலர் கொண்ட இலங்கையின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்கத் திட்டம்

அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கி 2010 செப்ரெம்பரில் ஐக்கிய அமெரிக்க டொலர் 1,000 மில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கி தலைமை முகாமையாளர்களாக பதிவேட்டாளர்களாக தொழிற்படுவதற்கு முன்னணி பன்னாட்டு வங்கிகள் /முதலீட்டு இல்லங்கள் தமது முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு அழைப்பு விடுக்கிறது.

நாட்டிற்கான பன்னாட்டு வழங்கல் 2010இற்கான நாடாளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டு வருடாந்த கடன்பாட்டு வரையறைக்குள்ளேயே காணப்படும்.

நாட்டிற்கான முறி வழங்கலிலிருந்து கிடைக்கும் பணம் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் உயர்ந்த உள்நாட்டு செலவினைக் கொண்ட உள்நாட்டு படு கடனையும் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட படு கடன்களையும் இளைப்பாற செய்வதன் மூலம் தற்போதுள்ள அரச படுகடன் சொத்துப்பட்டியலை மீளமைப்பதற்கும் பயன்படுத்தப்படும்.




## எச்.என்.பியின் இலாபம் ரூ.1.89 பில்லியன்



ஹற்றன் நஷனல் வங்கி வரிக்கு பிந்திய இலாபமாக 1.89 பில்லியன் ரூபாயை 2010-ன் முதல் அரையாண்டு இலாபமாகப் பதிவு செய்துள்ளது. 2009இன் இதே காலப் பகுதியில் 1.72 பில்லியன் ரூபாயை பதிவு செய்திருந்தது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த எச்.என்.பி.தலைமை நிறைவேற்று அதிகாரி(நிதி)அஜந்த வாஸ் குணவர்த்தன தெரிவித்திருப்பதாவது, வட்டி வருமானம் 15 வீதம் குறைவடைந்து 15.06 பில்லியன் கிடைத்தது .இதேவேளை 2010 ஜூன் முடிவில் மொத்தச் சொத்தானது 286.2 பில்லியனாக அதிகரித்துள்ளது என்றார்.

# சக்வித்தி ரணசிங்கவிடம் பணம், சொத்துக்கள் எதுவுமே இல்லையாம்!

கோடிக் கணக்கான ரூபாய் நிதி மோசடி செய்து பலரை ஏமாற்றிய, சக்வித்தி ரணசிங்க கடந்த 06ஆம் திகதி வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

கோட்டும் சூட்டுமாக திரிந்த அவர் அடர்ந்த தாடி வளர்த்த நிலையில் முற்றாக தன்னை மாற்றிக் கொண்டிருந்தார்.

சக்தி ஹவுஸ் கன்ஸ்ரக்ஷன்ஸ் பிரைவட் லிமிட்டட், ஐ.ரி. மனேஜ்மன்ட் சொலியூஷன் இன்ஸ்ரியூட், சக்ஸஸ் இன்டர்நஷனல் ஸ்கூல் அன்ட் சக்வித்தி செக்குரீட்டி மேன்பவர் சொலியூஷன் போன்ற நிறுவனங்கள் சக்வித்தி ரணசிங்கவுக்கு சொந்தமான நிறுவனங்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளன.

சக்வித்தி ரணசிங்கவுக்கு எதிரான முறைப்பாடுகளுள் 18 பேர் 30 இலட்சம் ரூபாய் வீதம் முதலீடு செய்துள்ளனர். சுமார் 24 பொலிஸாரும் முதலீடு செய்துள்ளனர். நாவல வீதி, இலக்கம் 8, நுகேகொடையில் சக்வித்தி ரணசிங்கவின் பிரதான அலுவலகம் அமைந்திருந்தது.

பெருந்தொகையாக மோசடி செய்த பணம் தொடர்பாகவும், வெளிநாட்டில் தங்கியிருந்த காலத்தில் மேற்படி பணம் எங்கு வைக்கப்பட்டது என்பது தொடர்பாகவும் இரகசிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அத்துடன் அவருக்கு எதிராக பதியப்பட்ட 2 ஆயிரத்து 900 முறைப்பாடுகளும் ஒவ்வொன்றாக விசாரணைக்கு உட்படுத்தப் படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலகுவில் ஆங்கிலம் கற்கலாம் என்ற விளம்பரங்களுடன் அறிமுகமாகிய சக்வித்தி ரணசிங்க ஒரு பிரபல ஆங்கில ஆசிரியராக விளங்



கைது செய்யப்படுவதற்கு முன்னர்


கினார். சக்வித்தி என்ற பெயரில் நிதி நிறுவனம் ஒன்றையும் நடத்தி வந்தார். இந்த நிதி நிறுவனத்தில் ஆயிரக் கணக்கானோர் பல இலட்சங்களை முதலீடு செய்திருந்தனர்.

முதலீடு செய்யும் பணத்துக்கு அதிகளவு வட்டி பெற்றுத் தருவதாக கூறியதை நம்பி ஏராளமானோர் முதலீடு செய்தனர்.

கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் தனது நிதி நிறுவனத்தை இழுத்து மூடிவிட்டு குடும்பத்துடன் தலைமறைவானார்.

நிதி நிறுவனத்தில் முதலீடு செய்தவர்கள் சிலர் தற்கொலை செய்து கொள்ளவும் முயன்றனர். சிலர் மாரடைப்பினால் கூட உயிரிழக்கவும் நேரிட்டது. இந்த நிலையிலேயே இவர் 9 ஆயிரம் மில்லியன் வரை மோசடி செய்தமை அம்பலத்துக்கு வந்தது. பொலிஸாரினால் தேடப்பட்டுவந்த இவர், நாட்டை விட்டுதப்பிச் சென்று வெளிநாடொன்றில் தலைமறைவாகியிருந்தார். இந்த நிலையிலேயே கடந்த 6ஆம் திகதி இவர் கைதாகியுள்ளார்.

இதற்கிடையில், கோடிக் கணக்கான ரூபாய் நிதி மோசடி செய்து பலரை ஏமாற்றிய சக்வித்தி ரணசிங்கவிடம் தற்போது எந்தவொரு அசையும் மற்றும் அசையாச் சொத்தோ அல்லது வங்கிக் கணக்கோ இலங்கையில் இல்லை என்பது




கைதின் பின்பு

விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இந்தியாவில் இருந்து வந்ததையடுத்து சில மாதங்கள் சக்வித்தி சிலாபத்திலுள்ள வீடொன்றில் வாடகைக்கு இருந்துள்ளார். அங்கு அவரது மனைவியும் பிள்ளைகளும் பெரும் சிரமத்தில் வசித்து வந்துள்ளனர். ஒருவேளை சாப்பாட்டுக்கே அவர்கள் பெரிதும் சிரமப்பட்டுள்ளனர். அங்கு அவர், ஆங்கிலப் பாடநெறி ஒன்றுக்காக ஒரே தடவையில் பணத்தை வசூலித்த பின் அங்கிருந்தும் தப்பிச் சென்றுள்ளார்.

ரணசிங்கவிடம் விசாரணை நடத்துவதற்கு நான்கு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாத சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

# பங்குச்சந்தை முதலீடுகளுக்கான அறிமுகம்

கடந்த ஞாயிறன்று வெளியான, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை–யாழ்பாணக் கிளையினரின் தொகுப்பின் தொடர்ச்சி இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

**முதலீட்டைத் தெரிவு செய்யும்போது கருத்தில் கொள்ள வேண்டியவை**

நாம் முதலீட்டினை மேற்கொள்ளமுன் முதலீட்டு மூலங்கள் தொடர்பான பின்வரும் விடயங்களை கருத்தில் கொள்ளுதல் இன்றியமையாதது ஆகும்.

- ☞ முதலீட்டுக்கான போதிய வருமானம்
- ☞ முதலீட்டுக்கான பாதுகாப்பு
- ☞ முதலீடானது காலத்துடன் இணைந்த வகையில் பெருகக் கூடியதாக இருத்தல்
- ☞ முதலீடானது காலதாமதம் இன்றி விரைவாகப் பணமாக மாறுதல்–முதலீட்டின் திரவத் தன்மை
- ☞ முதலீட்டுக்கான ஆபத்து மற்றும் இடர்முகாமை
- ☞ வரிச்மை
- ☞ வசதித்தன்மை

எம்மிடம் உள்ள உழைப்பானது இன்று பொதுவாக பின்வரும் அத்தியாவசிய முதலீட்டு மூலங்களான கல்வி, விவசாய உற்பத்திகள், தனியுடமை முயற்சிகள் மற்றும் சுய தொழில் முயற்சிகள் போன்றவற்றில் முதலீடு செய்யப்படுவதனை எம்மால் அவதானிக்க முடிகிறது.

மேற்குறிப்பிட்ட முதலீட்டு முயற்சிகளுக்கு பல்வேறுபட்ட காரணங்கள் இருந்தபோதும் அடிப்படையில் வருமான மட்டத்தினை படிப்படியாக உயர்த்துவதனூடாக வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தலே நோக்கமாகும். இந்தவகையில் தனியார் முயற்சிகள் மூலம் உழைக்கப்பட்ட வருமானத்தின் ஒரு பகுதியினை ஒப்பீட்டளவில் காத்திரமான வருமான திரும்பல்களை ஈட்டித்தரத்தக்க மூலங்களை இனங்கண்டு முதலீடு செய்தல் என்பது புத்திசாதுரியமானதாக அமையும்.

பாரம்பரிய வங்கிச் சேமிப்பு முறைகளுடன் ஒப்பிடுகையில் பணத்தினை பங்குச்சந்தை முதலீட்டு மூலங்களான பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகளின் பங்குகள், தொகுதிக்கடன்கள், நம்பிக்கை அலகுகள், அரச கடன்பிணைகளான திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளில் முதலீடு செய்வதனூடாக பணத்திற்கான உச்ச வருமானத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வங்கி போன்ற நிதி நிறுவனங்களும் மக்களிடமிருந்து திரட்டப்பட்ட சேமிப்புகளை மேற்குறிப்பிட்ட பங்குச்சந்தை மூலங்களில் முதலீடு செய்வதனை வழமையாகக் கொண்டுள்ளன.

**இலங்கையில் மூலதனச் சந்தை**
**Capital Market in Sri Lanka**

நீண்டகால நிதி வழங்குநர்களையும், நிதி பெறுநர்களையும் கொண்டமைந்த சந்தை மூலதனச்சந்தையாகும். பொதுவாக மூலதனச் சந்தையில் கொடுக்கல் வாங்கல்கள் செய்யக்கூடிய பிணைகளாக பின்வருவன அமைகின்றன.

- ☞ பங்குகள் (Shares)–கம்பனிகளின் உரிமைத்துவத்தினை குறிக்கிறது.
- ☞ நம்பிக்கை அலகுகள் (Unit Trusts)நிரற்படுத்தப்பட்ட முதலீடுகளை குறிக்கிறது.
- ☞ தொகுதிக்கடன்கள்(Debentures) –கம்பனிகளின் கடன் பிணைப்பத்திரம்
- ☞ திறைசேரி உண்டியல்,முறிகள் (Trearsury Bills/Bonds) – அரசாங்க கடன் பிணைப்பத்திரங்கள்

**மூலதனச் சந்தை முதலீட்டின் நன்மைகள்**
**Benefits of Capital Market**

மூலதனச்சந்தையில் முதலீடானது ‘ உயர் ஆபத்து –உயர் வருமானம்’ (High Risk High Return) எனும் கருத்தினை உணர்த்துகின்றது. இங்கு துறைசார் வல்லுநர்களின்(பங்குத் தரகர்கள்) அறிவுரையைப் பின்பற்றி திறமை அடிப்படையில் ஆபத்துக்களை பரப்புவதன் ஊடாக இவற்றிலிருந்தான முதலீட்டு வருமானத்தினை பின்வரும் வழிகளில் உச்சப்படுத்திக் கொள்ள முடியும். பொதுவாக மூலதனச்சந்தை முதலீடுகளிலிருந்து பின்வரும் பிரதிபலன்களை எதிர்பார்த்து முதலீடு முயற்சிகளில் ஈடுபடுகின்றோம்.

**1. மூலதனலாபம் (Capital Gain)**

பங்கினைக் கொள்வனவு செய்யும் போது கொடுக்கப்படும் விலை பங்கின் கொள்விலை எனவும், அதனை விற்பனை செய்யும்போது வழங்கப்படும் விலை பங்கின் விற்பனை விலை எனவும் குறிப்பிடப்படும். இங்கு கொள்விலையினை விட விற்பனை விலை அதிகமாகக் காணப்படும்போது அது மூலதன லாபம் எனவும், மாறாக கொள் விலையினை விட விற்பனை விலை குறைவாகக் காணப்படும் போது அது மூலதன நட்டம் (Capital Loss) எனவும் கூறப்படும். இவ் வருமானத்திற்கு வருமான வரி விலக்கு உண்டு. மூலதனலாபம் = பங்கின் விற்பனை விலை–பங்கின் கொள் விலை.

**2. பங்கிலாபம் (Dividend)**

கம்பனியால் உழைக்கப்படுகின்ற இலாபம் உரிமைத்துவத்திற்கு ஏற்ப பங்குதாரர்களிடையே பகிர்ந்து அளிக்கப்படுகிறது. உரிமைத்துவத்திற்கு ஏற்ப பகிரப்படும் இலாபம் பிரத்தியேகமாக பங்கிலாபம் எனப்படும். இப் பங்கிலாபமானது பணமாக அல்லது வேறு சொத்து வடிவில் வழங்கப்படலாம்.

(தொடரும்)

# பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5115.79 | 50.72 |
| மிலங்கா விலைச்சுட்டி | 5744.59 | (14.89) |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 9337.01 | |

***உயர்வடைந்த பங்குகள்:*** பைரா பாம்ஸ் ,மல்வத்த ,கிரைன் எல்வற்றரஸ், ரேணுகா ஹோல்டிங் ,களனி ரயர்ஸ் ,த புக்கிட் தாரா.

***சரிவைக் காட்டிய பங்குகள்:*** தன்கொட்டுவ ,புளூடைமன்ஸ் ,என்வெயர் மென்டல் றிசோசஸ் ,(வோரன்ற்),அசோக் லேடன்ட்,அவிவா என்.டி.பி.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 111.62 | 113.20 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 173.73 | 177.34 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 142.70 | 146.17 |
| சுவிஸ் பிராங் | 105.44 | 108.79 |
| கனேடிய டொலர் | 106.28 | 109.79 |
| அவுஸ்திரேலிய டொலர் | 99.53 | 102.55 |
| சிங்கப்பூர் டொலர் | 81.77 | 83.77 |
| ஜப்பான் யென் | 1.28 | 1.32 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.42 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.60 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# ஈழத்தவர் வரலாறு

5

## (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றுக்குத் தெற்குக் கரையில் அமைந்திருக்கும் ஆதிச்ச நல்லூரிற் கிடைத்த ஈமத்தாழி அடக்கமுறைகளைப் பழந்தமிழ் இலக்கியங்கள திராவிடக் கலாசாரமாகக் காட்டியுள்ளன. இத்தகைய அடக்க முறைகளை நிகர்த்த ஈமத்தாழிகள் இலங்கையில் புத்தளம் மாவட்டத்தில் பழைய தம்பபன்னியில் பொம்பரிப்பு எனுமிடத்திற் செய்யப்பட்ட தொல்லாய்வுகளின் போது கிடைக்கப்பெற்றன.

இந்நூற்றாண்டின் முற்பகுதியில் பொம்பரிப்பில் ஒரு தாழிக்காடு காணப்பட்டது.1970 இல் இதில் மேலும் பல அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தாழிக்காடு தமிழ்நாட்டுத் தாமிரபர்ணி ஆற்றுப்படுகையிலுள்ள ஆதிக்க நல்லூர்த் தாழிக்காட்டினைப் பெரிதும் ஒத்துக் காணப்படுகின்றது. 1969 இல் அனுராதபுரத்திலும் 1970 இல் கந்தரோடையிலும் 1980 இல் மாந்தையிலும் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய அகழ்வுகள் விஜயன் கூட்டத்தினரின் ஆதிக் குடியேற்றம் நடந்ததாகக் கூறும் இடங்களிலெல்லாம் இப் பெருங்கற்காலக் கலாசாரம் நிலைத்திருந்ததை எடுத்துக்காட்டியுள்ளன. ஆதிச்ச நல்லூருக்கு எதிரேயமைந்த மாந்தையும் அரிக்கமேட்டிற்கு எதிரேயமைந்த பொம்பரிப்பும் ஒரே பிராந்தியம் எனக் கூறக் கூடியளவிற்கு இப்பெருங்கற் காலப் பண்பாட்டில் அதிக ஒற்றுமை இருப்பதாகத் தொல்லியலாளர் கூறுகின்றனர் என சிற்றம்பலம் கூறுகிறார். முதுமக்கள் தாழிகள் இலங்கையின் வேறு பல பகுதிகளில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ஆனைக்கோட்டை, பரந்தன், இப்பன்கடுவ, பத்தியகம்பளை, கல்மனை, கித்துல்கல், குருவித்தை, பத்ததொம்பலென்ன முதலான பகுதிகளில் அகழ்ந்தெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழிகள் திராவிட மக்களது குடியிருப்புகள் பரந்து நிலைத்திருந்தமையைச் சுட்டுகின்றன. 1985 ஆம் ஆண்டு மேமாதம் 31 ஆம் திகதி குஞ்சுப் பரந்தனில் என்னால் முதுமக்கள் தாழி ஒன்று அகழ்ந்தெடுக்கப்பட்டது.

இது இப் பிரதேசத்தில் நிலைத்து நின்ற பண்டைய திராவிட நாகரிகத்தின் பழைமையைப் பறைசாற்றுகின்றன.

### 2.3.2. ஆதிப் பிராமிக் கல்வெட்டுகள்

தென்னாசியாவில் எழுத்துக்களின் தோற்ற காலத்தையிட்டு முரண்பட்ட கருத்துக்கள் நிலவினாலும் கி.மு.3ஆம் நூற்றாண்டளவில் அசோகன் ஆட்சியுடன் பிராமி என்ற வரிவடிவம் பரவலாகப் பயன்படுத்தப்பட்டதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. இதை அசோகப் பிராமி எனவும், வடபிராமி எனவும் அறிஞர் அழைத்தனர். இதையொத்த வரிவடிவங்கள் சமகாலத்தில் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், அசோக பிராமியில் காணப்படாத தமிழுக்கே சிறப்பான இ, ம, ழ, ற, ன, ள போன்ற எழுத்துக்கள்



ஆனைக்கோட்டையில் கிடைத்த குறுநிலத் தலைவரின் முத்திரை

காணப்படுகின்றன. இவை தமிழ்ப்பிராமி எனவும் திராவிடி எனவும் அழைக்கப்படுகின்றன. இலங்கையில் இதுவரை 1500 இற்கு மேற்பட்ட பிராமிச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுட் பெரும்பாலானவை பிராகிருத மொழியிற் பௌத்தம் சார்ந்த செய்திகளைக் கூறுகின்றன. இச் சாசனமொழி இங்கிருந்த திராவிட எலு மொழியுடன் கலந்தே பிற்காலத்தில் சிங்கள மொழி தோற்றம் பெற்றது. தமிழ்நாட்டில் பிராமிச் சின்னங்கள் நன்கு ஆராயப்பட்டுள்ளன.

இலங்கைச் சாசனங்கள் பலவற்றோடு ஒப்புநோக்கிச் சுட்டிக்காட்டியுள்ளனர். தமிழ்நாட்டு பிராமிச் சாசனங்கள், வடபிராமி எழுத்துக்களிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றன. தென்னிந்திய இலங்கைப்பிராமி எழுத்துக்கள் வரிவடிவ அமைப்பில் ஒன்றுடன் ஒன்று ஒத்துள்ளன. இவற்றை ஆராய்ந்த சிங்கள ஆய்வாளர்களான ஈ.பி. பெர்ணாட்டோ, சத்தமங்கல கருணரத்தின, ஆரிய அபயசிங்க போன்றோர் பௌத்த மதத்துடன் வடபிராமி எழுத்துக்கள் அறிமுகமாவதற்கு முன்னரே,தமிழ்நாட்டிலிருந்து பரவிய தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் இலங்கையில் உபயோகத்தில் இருந்துள்ளன என்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் கிடைத்த மிகப் பழைய சாசனம் கந்தரோடையில் மட்பாண்ட ஓடொன்றில் பொறிக்கப்பட்டு கிடைத்த பிராமி எழுத்துச் சாசனமாகும். பிராகிருத மொழியில் இதன் வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது. ததஹபத/தத்தவின் பாத்திரம். கி.பி. 3 அல்லது 4 நூற்றாண்டைச் சேர்ந்த முத்திரைச் சாசனம் ஒன்று கந்தரோடையில் கிடைத்துள்ளது. செந்நிறக் கார்ணீலியன் முத்திரை ஒன்றில் விஷ்ணு பூதிஸ்ய/விஷ்ணு பூதியனுடைய எனத் தென்பிராமி எழுத்திலே பொறிக்கப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டையில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போது ஓர் எலும்புக் கூடும், வெண்கலத்தாலான முத்திரை ஒன்றும் கிடைத்தன. இதன் வாசகம் கோவேந்தன் / கோவேதம் ஆகும்.

தமிழர் வரலாற்றுப் பாரம்பரியம் தொடர்பாக மூலாதாரங்களைத் தேடும் பணி ஒன்றின்போது கந்தரோடையில் தமிழ்ப்பிராமி வரிவடிவம் பொறிக்கப்பட்ட கறுப்பு, சிவப்பு மட்பாண்ட துண்டுகள் சில கிடைத்தன. கறுப்பு , சிவப்பு மட்பாண்ட வகையைச் சேர்ந்த தட்டையான சட்டி ஒன்றின் விளிம்பில் மிகத் தெளிவாகப் பொறிக்கப்பட்டிருந்த சாசன வாசகம் ஒன்று கந்தரோடையில் உள்ள மேட்டு நிலப் பகுதியில் பொதுமக்களால் வெட்டப்பட்ட குழி ஒன்றினுள்ளிலிருந்து



கநதரோடையல (யாழ்ப்பாண மாவட்டம்) கிடைத்த ஆதி இரும்புக் கால மட்பாண்ட ஓடும் பிராமிக் கல்வெட்டும்.

மீட்கப்பட்டது. அதில் "குணி" என்று மிகவும் தெளிவாகப் பிராமி வரிவடிவம் காணப்பட்டது. இதில் பிக்குணி என்ற தமிழ்ப்பதத்தின் இறுதிப்பதமாக அமையக்கூடும் என சொ. கிருஷ்ணராசா தெரிவித்தார். இது கி.பி. 1 ,2 ஆம் நூற்றாண்டு தமிழ்நாட்டு வரிவடிவ முறையைத் தழுவியதாகவுள்ளது.

கி.மு.3ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையில் பயன்படுத்தப்பட்டு வந்த பிராமி சாசனங்களிலிருந்து தென்னிந்தியாவை ஒத்த அரச முறைமை இங்கும் தோன்றியதை உறுதிப்படுத்தலாம்.

**கலாநிதி க.குணராசா**
செங்கை ஆழியான்

சாசனங்களில் காணப்படும் ஆய் (ஆய) , வேள்(வேள) என்பன இலங்கையின் சிற்றரசர்கள் சூடிய பட்டங்கள் ஆகும். "ள் " என்ற பிராமி எழுத்து தமிழ் மொழிக்குரிய சிறப்பு எழுத்து ஆகும்.ஆய் , வேள் என்ற சிற்றரசர்களைக் குறிக்கும் 40 இற்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் அனுராதபுரம், களனி, வவுனியா, பெரிய புளியாலங்குளம், திருமலை, மட்டக்களப்பு, பூநகரி ஆகிய இடங்களில் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து கி.மு 3ஆம் நூற்றாண்டில் அனுராதபுரத்திற்கு தெற்கிலும் வடக்கிலும் பல தமிழ் சிற்றரசுகள் இருந்தனவெனக் கூற முடியும். (தொடரும்)

# தமிழ்க் கற்றல் கற்பித்தலில் மின்கற்றல் முறை

2




(நேற்றைய தொடர்ச்சி)

### இணையவழித் தமிழ்ப் பாடங்களும் மின்கற்றலும்

இணையவழியில் தமிழை முதன்மை மொழியாகக் கற்பிக்கும் தமிழ் இணையப் பல்கலைக்கழகப் பாடங்களின் உருவாக்கமும் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் பென்சில்வேனியாப் பல்கலைக் கழகப் பாடங்களின் உருவாக்கமும் மின் கற்றிலின் அடிப்படையிலானவை. இணைய வழியிலான கற்றலில், மாணவனை மையமாகக் கொண்டு, மாணவனின் கற்றல் சூழல், வாய்ப்பு, தேவை கற்கும் தன்மை, கற்றல் அனுபவம் முதலியவற்றை மனத்திற் கொண்டு. மாணவன் விருப்பத்துடனும், புரிதலுடனும் தொடர்ந்து மீண்டும் மீண்டும் கற்று மகிழ்வடையும் வகையிலான மின்கற்றல் முறையில் தமிழ்ப் பல்கலைக்கழகப் பாடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மழலைக் கல்வி முதல் பட்டயம், மேற்பட்டயம், இளங்கலைப் பட்டம் வரையிலும் வழங்கப்படும் தமிழ்ப் பாடங்கள், படித்தல், பார்த்தல்,கேட்டல் ஆகிய தன்மைகள் அமைந்தவாறு உருவாக்கப்பட்டுள்ளன.

எனவே படங்கள் (Visual pictures), அசைவுப் படங்கள் (Animations), படவரைவு (Grapahics), ஒலி (Audio), ஒளிக்காட்சிகள் (Video) ஆகியன பாடங்களில் இடம் பெற்றுள்ளன.

**செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை**

### தமிழ் இணையப் பல்கலைக்கழகப் பாடங்கள்

தமிழ் இணையப் பல்கலைக்கழகப் பாடங்கள் மின் கற்றலுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாய்த் திகழ்கின்றன.நாட்டியக் கலையில், 'அலாரிப்பு' என்பது ஒரு நடன நிகழ்ச்சி. இதைப் பற்றிய பாடம் பல்கலைக்கழக இணையத் தளத்தில் இடம்பெற்றுள்ளது. பாடத்தில், 'அலாரிப்பு' என்ற நடன நிகழ்ச்சியைப் பற்றிய விளக்கம் தரப்படுகிறது. பின்னர், அலாரிப்பிலுள்ள பாடல், இசையுடன் ஒலிக்கப்படுகிறது. அடுத்து, 'அலாரிப்பு' நடன நிகழ்ச்சி,ஒலி, ஒளிக் காட்சியாக இடம் பெற்றுள்ளது. மாணவன் விரும்பினால், நடன நிகழ்ச்சியை மீண்டும் மீண்டும் பார்த்து, நடன பயிற்சியையும் தானே பெறும் வாய்ப்பையும் இப்பாடம் நல்குகிறது.

மேலும் பாடத்தின் இறுதியிலுள்ள காட்சியகத்தில் பாடம் தொடர்பாகவும், நாட்டியம் பற்றியும் அறிந்துகொள்ளும் வகையில் பல்வேறு வகையான நாட்டிய நிகழ்ச்சிகள் ஒலி, ஒளிக் காட்சிகளுடன் இடம் பெற்றுள்ளன.

பாடத்தின் இடையில், மாணவன் தன்னை - தன் கற்றலை மதிப்பீடு செய்து கொள்ளும் வகையில் தன்மதிப்பீட்டு வினாக்களும் இடம்பெற்றுள்ளன.

சிலப்பதிகாரம் பற்றிய பாடத்தில் சிலப்பதிகாரத்தின் கதை,ஒலியுடன், சில விநாடிகளில் அசைவுப்படங்களாகக் (Animations) காட்டப்படுகின்றன. கண்ணுக்கினிய காட்சிகளாக வழங்கப்படுவதால், தொய்வில்லாமல், ஆர்வத்தோடும், மகிழ்வோடும் விரும்பிக் கற்கும் சூழலை உருவாக்குவதோடு, கால விரயத்தையும் தவிர்க்கிறது. பல பக்கங்களில் கூறவேண்டிய நெடிய கதை அசைவுப் படங்களாகக் காட்சிப்படுத்தப்படுவதால் மனத்தில் பதிந்து, மனக்கண்ணின் முன்னால் வந்துகொண்டிருக்கும் - மனத்திலிருந்து அகலாது.

கணனியின் செயற்பாட்டையும், தொழில்நுட்ப வளர்ச்சிகளையும் பயன்படுத்தி எத்தனை முறை வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் எங்கிருந் தும் கற்கும் வாய்ப்பும் வசதியும் உள்ள இப்பாட அமைப்புகள், மாணவனை சோர்வின்றி தொய்வில்லரமல் ஒரு குறிக்கோளுடன் விரும்பிக் கற்கும் வாய்ப்புகளை நல்குகின்றன.

### பென்சில்வேனியாப் பல்கலைக்கழகப் பாடங்கள்

இணைய வழியாக தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் பென்சில்வேனியாப் பல்கலைக்கழகப் பாடங்களும் மின் - கற்றலின் அடிப்படையிலானவை. இணை யப் பல்கலைக்கழக பாட அமைப்பில் படங் கள், படக்காட்சிகள், ஒலி, ஒளிக்காட்சிகள் முதலியன பாட அமைப்பில் இடம்பெற்றுள்ளன.

**பேரா.ம.செ.இரபிசிங்**

பேச்சுத்திறன்,எழுத்துத் திறன், படிக்கும் திறன் மற்றும் புரிந்துகொள்ளும் திறன் ஆகிய நான்கு திறன்கள் இரண்டாம் மொழியாக ஒரு மொழியை கற்கும் மாணவர்களுக்கு அவசியமாகின்றது. (வாசு. அரங்கநாதன் Tamil.internet சிங்கப்பூர் 2003) . இவற்றின் அடிப்படையில் பென்சில்வேனியாப் பல்கலைக்கழகங்கள் பாடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. (தொடரும்)

# சில்லாலை கதிரைமாதா ஆலய பெருவிழா இன்று



சில்லாலையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பரிசுத்த கதிரை மாதாவின் ஆண்டுப் பெருவிழா திருநாள் திருப்பலி இன்று காலை நடைபெற்று தொடர்ந்து திருச்சுரூபப் பவனி இடம் பெறவுள்ளது.

கடந்த 400 ஆண்டு கால பழைமை வாய்ந்த திருச்சபையின் சரித்திரத்தைக் கொண்ட இக் கோவிலை சில்லாலையூர் வாழ் மக்கள் காலத்திற்கு காலம் பல நிலைகளில் புனரமைப்புச் செய்து வந்தனர்.

1957ஆம் ஆண்டில் இவ்வாலயம் நவீன வசதிகளைக் கொண்ட ஆலயமாக புனரமைப்புச் செய்யப்பட்டு ஒரு தனித்தோற்றத்தைப் பெற்றது.

இவ்வாலயத்திற்கு வருகை தரும் மக்களின் அதிகரிப்பையும் தேவைகளையும் கருத்திற் கொண்டு அந்நாள் மறை மாவட்டஆயர் வணபிதா எமிலியானிஸ்பிள்ளை ஆண்டகையின் உதவியுடன் அக்காலப்பகுதியில் பங்குத்தந்தையாக இருந்த வணபிதா லூயிஸ்டெஸ்ஸி அடிகள் தற்பொழுது இருக்கும் நவீன ஆலயத்தை அமைத்து முடித்தார்.

இவ்வாயல அமைப்பிற்கு ஏற்ப நவீன கோபுரம் ஒன்றை அமைக்க வணபிதா பிரான்ஸிஸ் புலாஸ் அடிகள் திட்டமிட்டார். இவரின் திட்டத்திற்கு அமைய இக்கோபுரம் வடிவமைப்புச் செய்யப்பட்டு வணபிதா இராஜரட்ணம் அடிகளின் காலப்பகுதியில் கட்டி முடிக்கப்பட்டது.தற்போது இவ்வாலயமானது புதுப்பொலிவுடன் மெருகூட்டப்பட்டு காட்சி அளிப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. (6-2)

# வட்டக்கச்சி மருத்துவமனைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்கவும்

## அப்பகுதி மக்கள் கோரிக்கை

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மருத்துவமனை வாரத்தில் இருநாட்கள் மட்டுமே இயங்கி வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வட்டக்கச்சி இராமநாதபுர பகுதி மக்கள் மீள்குடியமர்ந்து நான்கு மாதங்கள் கடந்த நிலையிலும் இப்பகுதி மருத்துவமனையானது வாரத்தில் செவ்வாய் ,வெள்ளி ஆகிய இருநாட்களில் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மட்டுமே வைத்திய சேவை நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நோயாளர்கள் முதல் முதியோர் வரை பெரும் அவலத்தை அனுபவிக்கின்றனர்.

இவ்வைத்தியசாலை இடம்பெயருவதற்கு முன் நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு மாதத்திற்கு ஒருமுறை கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து வைத்தியர்கள் வருகை தந்து வைத்திய பரிசோதனைகள் நடாத்தப்பட்டு வந்தது.

இதேபோன்று இவ்வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமித்து வைத்திய உதவிகளை மக்கள் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டுமென்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (6-2)


Hatton National Bank

## அடகுப் பொருட்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி,மானிப்பாய் ஆகிய கிளைகளில் 20.06.2009 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 21.08.2010 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல.212, 214,ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியா விட்டால்....

➢ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா.500) செலுத்தி

அல்லது

➢ தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப்பொருட்களை மீள அடகுவைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

(சி/862) ஹற்றன் நஷனல் வங்கி


# 15.08.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் நிகழ்வுகள்

- 1040 - ஸ்கொட்லாந்தின் மன்னன் முதலாம் டங்கன் மக்பெத்துடனான போரில் கொல்லப்பட்டான்.
- 1057 - ஸ்கொட்லாந்தின் மன்னன் மக்பெத் மூன்றாம் மால்க்கமுடனான போரில் கொல்லப்பட்டான்.
- 1915 - பனாமா கால்வாய் திறக்கப்பட்டது.
- 1920 - வார்சாவில் இடம்பெற்ற போரில் போலந்து இராணுவத்தினர் சோவியத் படைகளை வென்றனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பான் சரணடைந்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: கொரியா விடுதலை பெற்றது.
- 1947 - முகமது அலி ஜின்னா பாகிஸ்தானிடம் முதலாவது ஆளுநராகப் பதவியேற்றார்.
- 1947 -இந்தியா பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்று பொதுநலவாய அமைப்பின் கீழ் தனி நாடாகியது. ஜவஹர்லால் நேரு முதலாவது தலைமை அமைச்சர் ஆனார்.
- 1948 - தென்கொரியா உருவாக்கப்பட்டது
- 1950 - அஸ்ஸாமில் நிலநடுக்கம் மற்றும் வெள்ளம் காரணமாக 574 பேர் பலி 5,000,000 பேர் வீடிழந்தனர்.
- 1960 - கொங்கோ குடியரசு பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1973 - வியட்நாம் போர்: ஐக்கிய அமெரிக்கா கம்போடியா மீதான குண்டுவீச்சை நிறுத்தியது.
- 1975 - வங்காள தேசத்தில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அதிபர் ஷேக் முஜிபுர் ரகுமான் மற்றும் அவரது குடும்பத்தினர் (ஷேக் ஹசீனா தவிர) அனைவரும் கொல்லப்பட்டனர்.
- 1977 - இலங்கையில் தமிழருக்கெதிரான இனப்படுகொலைந டவ டிக்கையான ஆவணிப் படுகொலை ஆரம்பித்தது. 400ற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டு 10,000 பேர் வரை காயமடைந்தனர்.
- 1984 - துருக்கியில் குர்து மக்கள், குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி, இராணுவத்திற்கெதிராக கெரில்லா போரை ஆரம்பித்தனர்.
- 2005 - இந்தோனேசிய அரசாங்கத்துக்கும் ஆச்சே விடுதலை இயக்கத்திற்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஹெல்சிங்கியில் கைச்சாத்தானது.
- 2007 - பெருவில் இடம்பெற்ற 8.0 அளவு நிலநடுக்கத்தில் 514 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1769 - நெப்போலியன் பொனபார்ட், பிரெஞ்சு மன்னன்(இ. 1821)
- 1872 - ஸ்ரீ அரவிந்தர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர், ஆன்மிகவாதி (இ. 1950)
- 1958 - அர்ஜூன், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்.
- 1961 - சுஹாசினி, தென்னிந்தியத் திரைப்பட நடிகை.


### இறப்புகள்

- 1975 - ஷேக் முஜிபுர் ரகுமான், வங்காள தேச அதிபர் (பி. 1920)

### சிறப்பு நாள்

- தென்கொரியா - விடுதலை நாள் (1948)
- கொங்கோ - விடுதலை நாள் (1960)

## இந்தியா- சுதந்திரதினம் (1947)



# இருபதாம் நூற்றாண்டு இலங்கை கல்வியில் அரசியல் அழுத்தங்கள்

## இலங்கையின் கல்வி வளர்ச்சிப் போக்குகள்

எந்தவொரு சமூகத்தின் எதிர்காலத்திற்கும், நல்வாழ்விற்கும் முழுநிறைவான கல்வி இன்றியமையாதது. கல்வியினால் உருவாக்கப்படும் மனித வளமே, ஒரு சமூகத்தினது பெறுமதிக்க வளமாகும். எனவே ஒன்று கூடி சமூகஅமைப்பில் வாழத் தொடங்கிய மனிதன், காலப்போக்கில் அச்சமூகத்தின் மரபுகள், வழக்குகள், விழுமியங்கள் என்பவற்றுக்கு ஏற்ப தனது வாழ்வை அமைத்து கொள்கின்றான்.தான் பிறந்து வளர்ந்த சமூகத்தின் எல்லைக்குள் கட்டுப்பட்டு வருவதோடு,அதன் நோக்கங்கள், இலட்சியங்கள் ஆகியவற்றை பேணிப்பரப்பும் கடமையையும் பொறுப்பையும் கொண்டிருக்கிறான்.ஆகவே அத்தகைய கடமைகளையும் பொறுப்புக்களையும் மனிதன் உணர்ந்து செயற்படுவதற்கு அவனுக்கு கல்வி மிக இன்றியமையாத சாதனமாகும். அத்துடன் கல்வி என்பது உருமாற்றும் வல்லமை மிக்க மனித உரிமையாகும்.

சுதந் திரம், ஜனநாயகம்,நிலைபேறான மேம்பாடு யாவற்றுக்கும் அதுவே அத்திவாரம் என யுனி செவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு தனிமனிதனதும் பிறப்புரிமையான கல்வி அவனை வளர்ப்பதில் முக்கிய பங்காற்றுகின்றது. அறிவு வளர்ச்சி, ஆளுமை விருத்தி, ஆன்மீகப்பக்குவம், தொழிற்றிறன் மேம்பாடு, சமூகப் பொருத்தப்பாடு என்ற இவை ஒவ்வொன்றையும் கல்வியே வளர்க்கின்றது எனலாம்.அதற்கேற்ற வகையில் கொள்கைகள், திட்டங்கள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றமை கல்வி வளர்ச்சிப் போக்கில் காண முடிகின்றது. மக்கள் மத்தியிலுள்ள அடிப்படை கூறுகளில் காணப்படும் பேதங்கள் காரணமாக பிரச்சினைகளைத் தீர்ப்பதும் அல்லது அவற்றின் பாதிப்புக்களை குறைக்க உதவுவதும் அவற்றின் மூலம் மக்களிடையே நெருக்கத்தை உருவாக்குவதும் கல்வியின் செயற்பாடுகளில் அடங்கும். மனித விழுமியங்களை உறுதிப்படுத்தி, ஒருவரையொருவர் மதிக்கச் செய்து, புரிந்துணர்வையும் சுமூக உறவையும் ஏற்படுத்தும் வலிமை கல்விக்கு இருப்பது இதற்குக் காரணமாகும். எனவே இவ்வாறான சிறப்பு மிக்க கல்வி வளர்ச்சியினை அறிய வேண்டியது அவசியமாகும்.

மக்களின் தேவைகளையும், அவற்றுக்கு ஊடாக நாட்டின் தேவைகளையும் நிறைவேற்றி நிலைபெறச் செய்வதில் தான் கல்வியின் பயன் தங்கியுள்ளது. ஒரு நாட்டின் முரண்பாடுகளைக் களைந்து இணக்க நிலையை ஏற்படுத்துவதற்கு உதவக் கூடிய காரணிகளுள் கல்வி முக்கியமானதாகும். இவ்வாறாகப் பல்வேறு காரணங்களினாலும் முக்கியத்துவம் பெற்ற கல்வியானது இலங்கையின் ஆரம்ப காலப் பகுதியில் வணக்கத்தலங்களை மையாகக் கொண்டே உருவானது. அக்கால அரசர்களின் உதவியுடனேயே கல்வி வளர்ச்சி அடைந்தமையைக் காணமுடிகின்றது. பின்னர் அந்நியர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலப்பகுதியிலே சமயத்தைப் பரப்பும் நோக்குடன் கல்வி வழங்கப்பட்டது. இவ்விரு அந்நிய இனத்தவர்களின் பின் ஆட்சியைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் காலப் பகுதியில் சமயத்தை பரப்பும் நோக்கம் காணப்பட்ட போதும் கல்வி வழங்கப்பட்ட முறை வேறுபட்டதாக அமைந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரித்தானிய அதிகாரிகளின் காலத்தில் கல்வி நிலையங்கள் கொள்கை வகுத்து மேற்பார்வை செய்யும் திறமை மிக்க நிர்வாக சேவையிலும் பார்க்க கீழ்மட்ட சேவைகளுக்கு இலங்கையர்களை பயிற்றுவிக்க வேண்டிய தேவையும், மேலைத்தேச கலாசாரத்தையும், ஆதிக்கத்தையும், கிறிஸ்தவ சமயத்தையும் பரப்பவும், ஆங்கிலத் தேர்ச்சி உடைய மேன்மக்களின் சிலருக்கு ஆங்கிலம் கற்பிக்க மேலைத்தேச முறையில் அமைந்த ஸ்தாபனங்களை நிறுவவேண்டிய அவசியமாயிற்று.

19 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் பிரித்தானியரின் கல்விக் கொள்கை அதிக மாற்றமில்லாத கல்வித் திட்டம் ஒன்றினை விருத்தி செய்ய உதவியது. 1865 ஆம் ஆண்டு சட்ட நிருபண சபை பிரதி நிதியான குமாரசாமி இந் நாட்டின் கல்வி நிலையை ஆராய்ந்து முறையான கல்வி வளர்ச்சியை ஏற்படுத்த ஒரு ஆணைக்குழு தேவையென வேண்டுகோள் விடுத்தார்.இதன்படி 1865 ஆம் ஆண்டில் மோர்கன் தலைமையில் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இக்குழுவினால் சிபார்சுகள் பல முன்வைக்கப்பட்டன. இவற்றிற்கு அமைய 1869 ஆம் ஆண்டில் பொதுக் கற்பித்தல் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதல் பணிப்பாளராக ரி.எஸ்.வோரிஸ் நியமிக்கப்பட்டார். 1869 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பொதுக்கற்பித்தல் திணைக்களம் காலப்போக்கில் கல்வித்திணைக்களமாக உருமாறியமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் அன்று தொட்டு இன்றுவரை கல்வி நிர்வாகத்துறையின் வளர்ச்சிக்கு ஊற்று என்றால் மிகையாகாது. தொடர்ந்து சமய மறுமலர்ச்சியினூடாக உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட சமயக் கல்வி மறுமலர்ச்சி காரணமாக ஆரம்பிக் கப்பட்ட பாடசாலைகள் கல்வி வளர்ச் சிக்கு உறுதுணையாக அமைந்தன.

**01**

இக் காரணத்தால் கல்வி கற்றோர் தொகை அதிகரித்ததுடன் பல பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. எனவே இக்காலப்பகுதியில் கல்வியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது எனலாம்.1910 ஆம் ஆண்ட ளவில் ஆரம்பக் கல்வி ஓர் அளவில் நன்கு வளர்ச்சி அடைந்து காணப்பட்டது.

1920 ஆம் ஆண்டையடுத்த புத்தாண்டுக் காலத்தில் நாட்டில் வேலையின்மை எனும் பிரச்சினை பெருகியது. அதன் விளைவாக அப்பிரச்சினையை தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை ஆராய்ந்து கூறுதல் பொருட்டு ஆணைக்குழுவொன்றை நியமிக்கும் முகமாக ஏ.கனகரத்தினம் பிரேரணை ஒன்றுக்கு முன்னறிக்கை கொடுத்தார். இப்பிரேரணை சம்பந்தமான விவாதத்தில், வேலையில்லாமைக்குரிய பல காரணங்களில் வழுவான கல்விமுறையே வேலையில்லாப் பிரச்

**நாகேஸ்வரி விஜயகாந்தன்**

சினைக்கு காரணமென குறிப்பிடப்பட்டது. இவ் விவாதத்தை தொடர்ந்து அடுத்த ஆண்டிலேயே அவ்வங்கத்தவரே பிறிதொரு பிரரேணையை சட்ட சபையில் கொண்டு வந்தார். இதற்கமைய குடியேற்ற நாட்டின் கல்வி முறைக்கு ஒரு திட்டமான உருவம் அளித்தல் வேண்டும் என்பதை கருத்திற் கொண்டே புதிய கட்டளைச் சட்டம் உருவாக்கப்பட்டது. மனிங் அரசியல் சீர்திருத்தத்தினூடாக 1920 ஆம் ஆண்டில் முதலாம் இலக்க கல்விச் சட்டம் முறையாக முதன்முதலில் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் கல்விய மைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

(தொடரும்)

## மதுப்பிரியர்களின் அட்டகாசத்தை நிறுத்துமாறு மக்கள் வேண்டுகோள்

(கைதடி)

கைதடி பாலத்தடியில் இருந்து கைதடி தச்சன் தோப்புக்குச் செல்லும் வீதி இரவு 7.30 மணிக்கு பின் மதுப்பிரியர்களின் உல்லாச வீதியாக காட்சியளிக்கிறது.

இவ்வீதியில் இரவு வேளைகளில் கூடும் இளைஞர்கள் மதுக் கடைகளில் சாராயத்தை வாங்கி வந்து குடித்துவிட்டு இவ் வீதியால் செல்வோருக்கு பெரும் இடைஞ்சல்களைச் செய்கின்றனர்.

இரவு நேரங்களில் இவ்வீதியால் பயணிக்கும் குறிப்பாக பெண்கள், வயோதிபர்களிடம் தமது மதுபோதை வெறித்தனத்தைக் காட்டுவதாகவும் தகாத வார்த்தைகளை இவர்கள் பிரயோகிப்பதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதிக்கு உரிய அதிகாரி சென்று பார்வையிட்டு இப்பகுதியில் மதுப்பிரியர்களின் அட்டகாசத்தை நிறுத்துமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (6-2)

## விண்ணப்பம் கோரல்

(கொழும்புத்துறை)

இலங்கையில் கடந்த வருடம் நூல்களை வெளியிட்ட படைப்பாளிகளிற்கு விருது வ்ழங்கும் நோக்கில் இவ்வருடமும் இலங்கை இலக்கியப் பேரவையால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் கவிதை, சிறுகதை, நாடகம், சமயம், சிறுவர் இலக்கியம், காவியம், ஆய்வு மற்றும் மொழிபெயர்ப்பு நூல்கள் ஆகிய பல்துறை சார்ந்த நூல்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நூல்களிற்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன.

கடந்த ஆண்டு நூல்களை வெளியிட்ட நூலாசிரியர்கள் அவற்றின் பிரதிகளை தேர்வுக்கு அனுப்பிவைக்குமாறு இலங்கை இலக்கியப் பேரவையின் செயலாளர் சி.சிவதாசன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் தபால் மூலமாகவோ, நேரிலோ செயலாளர், இலங்கை இலக்கியப் பேரவை, இல.58, கனகரத்தினம் வீதி , அரியாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (6-2-51)


## 68 வருடங்களின் பின்னர் கந்தபுராண வீதி புனரமைப்பு


(கொழும்புத்துறை)

யாழ். ஆனைப்பந்தி வீதிக்கும் அரசடி வீதிக்கும் இடைப்பட்ட கந்தபுராண வீதியில் 68 வருடங்களின் பின் வீதி திருத்தவேலைகள் நடைபெற்று வருகின்றன.


யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவின் பணிப்பின் பேரில் யாழ். மாநகர சபை பணியாளர்களால் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

குன்றும் குழியுமாக பாதசாரிகளின் போக்குவரத்துக்கு இடையூறாக காணப்பட்ட இவ்வீதி புனரமைப்பு பணிகள் யாழ். மாநகர சபையின் பிரதி முதல்வர் து.இளங் கோவின் கண்காணிப்பில் நடைபெறுவதை அவதானிக்க முடிகிறது. (6-2-51)





யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் அண்மையில் கணனி மூலை திறந்து வைக்கப்பட்டது. இப் பாடசாலையின் முதலாவது அதிபரின் மகளும் யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறை விரிவுரையாளருமாகிய திருமதி அபிராமி ராஜ்குமார் கணனி மூலையை திறந்து வைப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் திருமதி அ.த.துரைசிங்கம் நிற்பதையும் பாடசாலையின் பெற்றோரும் நலன்விரும்பியுமான க.ரமணதாசன் கணனியை இயக்குவதையும் படங்களில் காணலாம்.



வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் ஆலய ஆடிப்பூர உற்சவத்தின் போது...

## இளைஞர் தின விழாவில் பங்கேற்கச் சென்ற யாழ்.இளைஞர்கள் திருப்பியனுப்பப்பட்டனர்

(தெல்லிப்பளை)

இளைஞர் விவகார அமைச்சினால் கடந்த 12 ஆம்திகதி கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சர்வதேச இளைஞர் தின விழாவில் பங்கேற்பதற்காக யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சார்பில் 11 ஆம் திகதி இளைஞர் சேவை உத்தியோகத்தர்களும் 40 இளைஞர், யுவதிகளும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் குறித்த மண்டபவாயிலில் வைத்து இருக்கைகள் போதாது என்பதனைக் காரணம் காட்டி உள்ளே செல்லவிடாது திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதேவேளை யாழ்ப்பாணத்து இளைஞர்கள் மட்டுமன்றி, மட்டக்களப்பு மற்றும் முல்லைத்தீவுப் பிரதேசத்தினைச் சேர்ந்த இளைஞர், யுவுதிகளும் இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், குறித்த மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்,யுவதிகள் பெரும் ஏமாற்றத்திற்கு உள்ளாகியதுடன் தமது மாவட்டங்களுக்குத் திரும்பிச் சென்றனர். இந்நிகழ்வில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும மற்றும் சர்வதேச பிரதிநிதிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (6-2)

## நுகர்வோர் சட்டங்களை மீறியோருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது

(கொழும்பு)

நுகர்வோர் சட்டங்களை மீறிய ஆயிரத்து 250 இற்கும் மேற்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

இதன்மூலம் 34 இலட்சத்து 15 ஆயிரத்துக்கும் அதிகமான தொகை அபராதமாக பெறப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் முதல் முறையாக யாழ்.மாவட்டத்திலும் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் 104 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டதுடன் நாடளாவிய ரீதியில் இந்தத் திட்டம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

## துறவறத்தை துறக்கும் பௌத்த பிக்குகளின் எண்ணிக்கை உயர்வு

(கொழும்பு)

அண்மைக் காலமாக துறவறத்தை துறக்கும் பௌத்த பிக்குகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் 80 வீதமான இளம் பௌத்த பிக்குகள் பல்கலைக்கழகப் பட்டப் படிப்பினை தொடர்வதற்காக துறவறத்தை தெரிவு செய்வதாகவும், பின்னர் காவி உடைக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக கொழும்பு ஊடகமொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்து ஆயிரத்து 423 இளம் பௌத்த பிக்குகள், காவி உடைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர்.

இதேவேளை இளம் பௌத்த பிக்குகளை நல்வழிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் பௌத்த விகாரைகளின் விகாராதிபதிகள் இந்த விடயம் குறித்து, கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இளம்பௌத்த பிக்குகளுக்கு அரசாங்கம் பல்வேறு சலுகைகளை வழங்கி வருவதாகவும், வருடாந்தம் பிரிவெனா மற்றும் பௌத்த பிக்குகளின் கல்விக்காக 450 மில்லியன் ரூபா செலவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-2)

## வடக்கின் உற்பத்திகளை தென்னிலங்கை பயனாளிகளுக்கு விற்பனை செய்யும் திட்டம்

### கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை

விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களைக் கொள்முதல் செய்து பாவனையாளர்களுக்கு நியாய விலையில் விற்பனை செய்யும் வேலைத் திட்டமொன்றை கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இதற்கமைவாக மரக்கறி, பழங்கள், பெரிய வெங்காயம் மற்றும் சின்ன வெங்காயம் முதலான விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எ.பி.ஜி. கிற்ஸ்றி தெரிவித்தார்.

நாக்செட் நிறுவனத்தின் மூலமாக இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது என்றும் இத்தகைய விற்பனை நிலையங்கள் தற்போது நாரஹென்பிட்டியவிலுள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் திறக்கப்பட்டுள்ளதுடன் இரத்மலானையிலுள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் இத்தகைய நிலையமொன்று விரைவில் திறக்கப்படும் என்றும் ஆணையாளர் குறிப்பிட்டார்.

மேலும் இந்த வேலைத்திட்டத்தின் மூலம் வர்த்தகத் துறையில் தனியார் துறையினர் கொண்டிருக்கும் விலை நிர்ணயம் தொடர்பான ஏகபோக தன்மையைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்றும் வடக்கு விவசாயி களின் உற்பத்திப் பொருட்களை தெற்கி லுள்ள பாவனையாளர்களுக்கு பெற்றுக் கொடுப்பதே இதன் பிரதான நோக்கமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

## சந்நிதி இரதோற்சவத்தன்று இலவச நூல் விநியோகம்



(யாழ்ப்பாணம்)

சரித்திரப் பிரசித்தி பெற்ற சந்நிதிக் கந்தன் இரதோற்சவத்தன்று " சந்நிதி வேலவனின் அற்புதங்களும் அனுக்கிரகங்களும் " எனும் நூல் வல்வெட்டி ஸ்ரீ வாணி வெளியீட்டகத்தினால் அடியார்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளது.

இந்நூலில் சந்நிதி திருத்தலக் காட்சிகள் அழகு வர்ணத்தில் அச்சிடப்பட்டுள்ளன. மேலும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், வல்வை ந.அனந்தராஜ் ஆகியோரின் சந்நிதி பற்றிய ஆக்கங்கள் சந்நிதித் தலத்தின் தனித்துவத்தை எடுத்தியம்புகின்றன. (6)

## ஆத்மஜோதி முத்தையாவின் 15 ஆவது குருபூசை

ஆத்மஜோதி முத்தையாவின் பதினைந்தாவது குருபூசை எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு ஏழாலையிலுள்ள ஆத்மஜோதி தியான மணி மண்டபத்தில் சைவத்திரு சண்முகவடிவேல் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் அனைவரையும் பங்குபற்றுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-2)




## நல்லூரானை தரிசிக்க விசேட பஸ் ஒழுங்குகள் செய்து தரப்படுமா ?


நல்லூர்க்கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் கந்தனை தரிசிக்க வரும் பக்தர்களின் நலன்கருதி விசேட போக்குவரத்து வசதியினை ஏற்படுத்தித் தருமாறு டிப்போ அதிகாரியிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

கடந்த காலங்களில் நல்லூர்க்கந்தசுவாமி கோயில் உற்சவத்திற்கு விசேட தினங்களில் மட்டுமே மானிப்பாய் வீதியூடாகச் செல்லும் சில பேருந்துகள் ஓட்டுமடம், கந்தர்மடத்தினூடாக யாழ்ப்பாணத்தை செல்வது வழக்கம்.

எனினும் விசேட தினங்களில் மாத்திரமே இப் பேருந்துகளில் சென்று பக்தர்கள் நல்லூரானை தரிசிக்க வசதியாக இருந்தது.

இதேவேளை மஹோற்சவ தின எல்லா நாட்களும் காலை, மாலை என இருவேளைகளிலும் இப் பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தி பக்தர்கள் பூஜை வழிபாடுகளில் கலந்து அருளாசி பெற தாங்கள் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆனையூர் பி.சுபா



யூனியன் அஷ்யூரன்ஸ் இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வில் வாடிக்கையாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவை பிராந்திய முகாமையாளர் ந.சுகுணன் வழங்குவதையும் அருகில் விற்பனை முகாமையாளர் சிறீவரதன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

கந்தனைக்காணாத கண்ணென்ன கண்ணே
கற்பூர ஒளி காணா கண்ணென்ன கண்ணே

~ சோமசுந்தரப் புலவர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பனையோலை மிதித்து உயர் வேலி அடைத்த எங்கள் பண்பாட்டை பாரடா முருகா

நல்லூர்க் கந்தனுக்கு இன்று கொடியேற்றம். கந்தப்பெருமானின் திவ்விய கருணையால் இலட்சக்கணக்கான பக்தர்கள் நல்லூர்ப் பதியில் கூடுவர்.

அதிகாலைப் பொழுதில் கந்தா... முருகா... கடம்பா... என்ற நாமார்ச்சனையுடன் இளைஞர்கள் முதல் முதியவர் வரை நல்லூர் திருவீதியில் அங்கப்பிரதட்சணம் செய்வர். பார்ப்போர் மனம் கசிந்துருகும்.

அக்காட்சியை நேரில் காண்பதைத்தவிர வார்த்தையால் விபரிக்கும் அளவிற்கு மனித மொழிக்கு வலுவில்லை.

இந்த வைகறைப்பொழுதில் முருகனைக் கூவி அழைத்து பெருவீதி மணலை தங்கள் உடலால் மென்மைப்படுத்தும் இளைஞர்களின் பக்தி பிரவாகத்தை காணும் போதெல்லாம் எங்கள் இனம், எங்கள் மொழி, எங்கள் இறை நம்பிக்கை இவற்றுக்கெல்லாம் ஏது குறையென்று மனம் மார்தட்டும்.

அதேநேரம் மாலைப் பொழுதில் கதிரவனின் மறைதலில் டெனிம் ரவுசர், ரீசேட், வீதியை உரசும் பாதணியுடன் வரும் இன்னுமொரு இளைஞர் கூட்டத்தை பார்க்கும் போது மனம் வெந்து சாம்பலாகும்.

ஏன் முருகா இப்படி ஒழுங்கில் ஒழுங்கீனம் ஒழுங்கீனத்தில் ஒழுங்கு இந்த நடைமுறை கூட இல்லாமல் இப்படியொரு பரிதாப நிலை என்று முருகனை பார்த்து நெஞ்சம் உருகும்.


இதுமட்டுமா கலாசார சீரழிவை ஏற்படுத்தும் கையடக்கத் தொலை பேசி உரையாடல்கள், கோயில்கள், குளங்கள், ஆட்கள் இல்லாத இடங்கள், ஒழுங்கைகள் என கூடும் இளசுகள், அவர்களின் போக்குகள் பாரடா முருகா!

பனையோலை வெட்டி வெளியார் பார்க்காத உயரத்திற்கு வேலியடைத்து பெண் பிள்ளைகளை வளர்த்தெடுத்த எங்கள் தமிழ் பண்பாடு 'கான்ட்போன்' கலாசாரத்தில் சுற்றித்திரியும் கோலத்தைப்பார்.

தமிழ்க் கடவுளே! கண்ணீரில் மிதக்கும் தமிழர் பரிதாபம் ஒரு புறம். கந்தா முருகா என்று உளம் உருகும் இளைஞர்கள் மறுபுறம் இதற்குள் இனமும், மொழியும், எங்கள் எதிர்காலமும் அறியாத பேதை இளசுகள் குச்சொழுங்கையில் கூடும் பரிதாபம்.

முருகா எதற்காக உன்னிடம் மன்றாடுவேன் கங்கையின் மைந்தன் என்பதால், தமிழர் கண்ணீரில் மிதப்பது உனக்கும் பிரியமோ! வேலவா வா கொடியேறிவா தமிழர் குறை தீர்க்கவா பனையோலை வேலிப் பண்பாட்டை பாதுகாக்க வா கான்ட்போனைச் சங்காரம் செய்ய வா... வா... வா...

# பூலோக கைலாசத்தில் இன்று கொடியேற்றப் பெருவிழா



சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லைக் கந்தனின் விகிர்தி வருடத்துக்கான கொடியேற்றப் பெருவிழா இன்று பக்திபூர்வமாகநடைபெறுகின்றது. தமிழ்த் தெய்வமாம் முருகனுக்கு தமிழ் மக்கள் வதியும் இடமெல்லாம் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. முருகனுக்கும் தமிழருக்குமிடையிலுள்ள தொடர்பு வரலாற்றிற்கும் அப்பாற்பட்டது எனலாம்.

எமது ஈழநாட்டில் கருணைக் கடலாகிய முருகன் கதிர்காமத்திலும், மாவிட்டபுரத்திலும், செல்வச்சந்நிதியிலும் கந்தவனக் கடவையிலும், மண்டூரிலும், சித்தாண்டி யிலும், வெருகலிலும், நல்லூர் முதலிய தலங்களில் கோவில் கொண்டிருக்கின்றான்.

யாழ்ப்பாணத்தில் நல்ல ஊராக சைவ அனுட்டானங்களுக்கெல்லாம் ஒரு குன்றமாக விளங்குவது நல்லூர்ப்பதி எனலாம்.

### கொடிச்சீலை

நல்லூரிலுள்ள செங்குந்த மரபினர் வருடா வருடம் நல்லூர்க் கந்த சுவாமி கோவிலில் நடைபெறும் கொடியேற்ற விழாவிற்கான கொடிச்சீலையை அழகிய தேரில் வைத்து ஊர்வலமாக எடுத்து வந்து கொடுக்கின்ற மரபுண்டு.

### மஹோற்சவ சிறப்பு

கொடியேற்றமானது ஆடி அமாவாசையிலிருந்து ஆறாவது நாள் ஆரம்பிக்கின்றது. தொடர்ந்து வரும் பத்தாவது நாள் மஞ்சத் திருவிழாவும், பதினேழாவது திருவிழா கார்த்திகை உற்சவமும், பத்தொன்பதாவது திருவிழா கைலாசவாகனத் திருவிழாவும் இருபத்திரண்டாவது நாள் தெண்டாயுத பாணி உற்சவமும் (மாம்பழத்திருவிழா) இருபத்திமூன்றாம் திருவிழா சப்பறத்திரு விழாவும், இருபத்தினான்காம் நாள் திருவிழா தேர்த்திருவிழாவும், இருபத்தைந் தாம் நாள் திருவிழா தீர்த்தோற்சவமும் இருபத்தாறாவது திருவிழா பூங்காவனத் திருவிழாவும் வெகுவிமர்சியாக நடைபெறும். இத்திரு விழாக் காலங்களில் பூலோக கைலாசமாக நல்லூர் காட்சியளிக்கும்.

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் மஹோற்சவம் ஆரம்பித்து விட்டால் அதன் அதிர்ச்சி யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல உலகம் முழுவதிலும் காணப்படுகிறது. எந்த மயமும் கந்தமயமாகவே காட்சியளிக்கிறது.

எல்லா ஊர்களிலும் சிறந்த நல்லூரில் எழுந்தருளிய கந்தவேளின் மஹோற்சவங்கள் நடைபெறும். இருபத்தைந்து தினங்களும் தினம்தோறும் விரதம் அனுட்டித்து திருக் கோயிலுக்குச் சென்று வலம் வந்து திருவிழாவில் பங்குபற்றி முருகன் அருள் பெற்று வீடு திரும்பும் பக்தர்களின் தொகை அளவிட முடியாது.

முருகனே! மாயோன் மருகனே! ஒரு கைமுகன் தம்பியே! உன் திருச் சந்நிதியில் வந்து நின்றாலே பெரியார், சிறியார், இளைஞர், முதியோர், கற்றார், கல்லார், வறியவர், செல்வர் நல்லோர், தீயார், அதிகாரி, அடிமை என்ற பேதம் ஒழிந்து யாவரும் முருகன் அடியார் என்ற உணர்ச்சி ஊற்றெடுக்க தம்மை மறந்து காதலாகிக்கசிந்து கண்ணீர் மல்கித் துதிக்கின்றனர்.

அவனருளாலே அவன் தாள் வணங்கு என்றாற்போல் அவன் அருளுக்கு பாத்திரமாகி வந்த வினையும், வருகின்ற வினையும் கந்தன் என்று சொல்லக் கலங்குமே என்பதை நல்லூரிலே கூடும் அன்பர்கள் நன்கு அறிவார்கள்.

எங்கு பார்த்தாலும் முருகப் பெருமானை போற்றும் நினைவு முதிர்ச்சியால் அனைத்திலும் முருகனின் பாடல்களே ஒலிக்கின்றன. அவன் துணைதான் நமக்கு எதனையும் தரவல்லது என்ற ஒரு பெரும் நம்பிக்கையினால் நாளும் அவனை வழிபட்டு வாழ்கின்றார்கள்.

பக்தியில் முறுகி நிற்பவர்கள் பரிகசிக்கப் போகிறார்களே என்று எண்ணமாட்டார்கள். அந்தக்கிளுகிளுப்பில் ஆடுகிறார்கள், பாடுகிறார்கள், திருக்கைவேல் காவல் என்று முருகப் பெருமானை வாழ்த்தி வாய் மணக்கப் போற்றி வழிபடுகிறார்கள்.

இத்தகு வரலாற்றுச் சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் சைவப் பெருமக்களின் தனித்துவமான பக்தியின் கருவூலமாகத் திகழ்கின்றதென்றால் வியப்பில்லை.

இன்று பக்திபூர்வமாக நடைபெறும் கொடியேற்ற விழாவுடன் ஏனைய மஹோற்சவங்களும் சிறப்புப் பொருந்தியனவாக அமையவுள்ளன.

**மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்**

## பொலிஸ்துறை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது ஐ.தே.க. பிரதித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ் துறையானது அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜனநாயக தேசியக் கூட்ட மைப்பினால் காலியில் ஒழுங்கு செய்திருந்த எதிர்ப்பு போராட்டத்தின் மீது பொலிஸார் நடத் திய தாக்குதல் ஏற்றுக் கொள்ள முடியாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.


நாடாளுமன்ற உறுப்பினர்கள் விஜித ஹேரத் மற்றும் அஜித் குமார மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியமை தொடர்பில் தெளிவான சாட்சியங்கள் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அமைதியான முறையில் நடத்தப்பட்ட எதிர்ப்பு போராட்டமொன்றை பொலிஸார் எவ்வாறு கலைக்கலாம் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். உயர்பாதுகாப்பு வலயத்தில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய அரச ாங்க அமைச்சர் விமல் வீரவன்சவிற்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விமல் வீரவன்சவின் அடியாட்கள் சிலர் உயர் பொலிஸார் அதிகாரி ஒருவரின் தொப் பியை கழற்றியதாகவும் இதற்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (6-2)

# விடுதலை எங்கிருந்து? - யாருக்கு?

## பரமபிதா காட்டிய பாதை



தம் சமூகம் உயர்வதற்கான செயலை விரைந்து முயன்று செய்பவர்க்கு அவர் ஆராயாமலே அச்செயல் தானே நிறைவேறும். ஆம் மண்ணில் பிறக்கின்ற ஒவ்வொருவரும் இந்த மானிட சமூகத்திற்குள் தான் பிறக்கின்றார்கள். அப்படிப் பிறக்கின்றவர்களில் பலர் அந்த சமூகத்தில் பல்வேறு நிலைகளில் அடிமைகளாய் வாழ்கின்றனர். இந்த அடிமை நிலை நேற்றோ அல்லது இன்றோ தோன்றியதல்ல. மனிதன் என்று அகங்காரத்திற்கும் ஆணவத்திற்கும் விலை போனானோ, அன்றே அடுத்தவனை அடிமைப்படுத்தி ஆள்வதில் பெருமையும், உயர்வும், இன்பமும் கண்டான்.

இதைத்தான் இன்றைய நற்செய்தி வாசகமும் எடுத்துக் காட்டுகின்றது.

அதாவது அடிமைகளில் கொடுமையானது சமூக அடிமைத்தனம். இது இனம், மொழி, நிறம், அரசியல், பொருளாதார, சாதீய, சமூக, சமய அடிப்படையில் தோன்றுவது, உயர்ந்த சாதியினரை அடிமைப்படுத்துவது, பெரிய சமயங்கள் சிறிய சமயங்களை அடிமைப்படுத்துவது, மற்றும் பெண்ணடிமைத்தனம், கொத்தடிமைகள், வரதட்சணை, குழந்தைத்தொழில் இவை எல்லாம் சமூக அடிமைத்தனங்களாகும். இத்தகைய அடிமைத்தனங்களை வேரோடு அழிக்க தனி மனிதனோடு இந்த சமூகமே விழித்தெழுந்து வென்றெடுத்துப் போராட வேண்டும். வரலாற்றில் இத்தகைய சமூக அடிமைத்தனங்கள் முறியடிக்கப் பட எத்தனையோ தலைவர்கள், தியாகிகள், மகான்கள் புறப்பட்டார்கள். அவர்களது தியாகச் சொல், செயல், சிந்தனையால் எண்ணற்ற அடிமைத்தனங்களுக்கு சாவுமணி அடிக்கப்பட்டது. ஒரு புத்தன், ஒரு மகாத்மா காந்தி, ஒரு அம்பேத்கர், ஒரு நெல்சன்மண்டேலா, ஒரு இயேசு, ஒரு நபி இப்படி எண்ணற்றவர்களின் தியாக வாழ்வில் இந்த சமூக அடிமை இருளிலிருந்து விடுதலை பெற்று ஒளிமயமாக மாறியிருக்கிறது.

ஆனால் அதேவேளையில் ஒரு அடிமைத்தனம் ஒழிய வேண்டும் என்றால் ஒரு மகானோ, அல்லது ஒரு தலைவரோ தன் உயிரை தியாகம் செய்யவேண்டும். இது மேற்கண்ட மனிதர்களின் வரலாற்றில் நாம் கண்டறிவது எனவே ஒருவரின் தியாக வாழ்வில் தான் ஒரு சமூகத்தின் விடியல் அமைந்திருக்கிறது.

ஆம், இன்று திருச்சபை புனித கன்னிமரியாளின் விண்ணேற்பு பெருவிழாவைக் கொண்டாடுகிறது - புனித கன்னிமரியாளின் இந்தப் பெருவிழா திருத்தந்தை 12 - ஆம் பத்திநாதரின் மறைக்கோட்பாட்டின் பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டு கொண்டாடப்படுகிறது. மரியாளின் இந்த விண்ணேற்பு நாம் மேற்கண்ட அடிமைத்தனங்களின்று விடுதலை அடைந்ததைக் குறிக்கின்றது.

இவ்வாறு மரியாவின் விண்ணேற்ற பெருவிழா தனி மனித விடுதலையையும், சமூக விடுதலையையும் குறிக்கின்றது.

*ஜோன் றொபேர்ட்*

# ஆப்கானில் அமெரிக்க இராணுவச் செயற்பாடு; புதிய தகவல்களை வெளியிட விக்கிலீக்ஸ் ஆயத்தம்

## பென்டகன் அதிகாரிகள் எதிர்ப்பு

(கொழும்பு)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவத்தின் செயல்பாடு தொடர்பான புதிய தகவல்களை வெளியிட'' விக்கிலீக்ஸ்'' நிறுவனம் ஆயத்தமாகி வருகிறது.

இலண்டனைச் சேர்ந்த விக்கிலீக்ஸ் நிறுவனம் கடந்த மாதம் அமெரிக்க இராணுவ செயல்பாடு குறித்த அதிர்ச்சிகரமான செய்திகளை தனது இணையத்தளத்தில் வெளியிட்டது.

சுமார் 70 ஆயிரம் தகவல்களை தனது இணையத்தளத்தில் விக்கிலீக்ஸ் வெளியிட்டது. இது அமெரிக்காவுக்கு மிகுந்த தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியது. இந்நிலையில் மேலும் 15 ஆயிரம் ஆவணங்கள் கொண்ட தகவலை வெளியிடப் போவதாக விக்கிலீக்ஸ் செய்தித் தொடர்பாளர் ஜுலியன் அசாஞ்ச் தெரிவித்துள்ளார்.

ஆப்கன் போர் தொடர்பாக எஞ்சியுள்ள ஆவணங்களை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

ஆனால் இந்த ஆவணங்கள் வெளியானால் அது அமெரிக்க இராணுவம் பற்றி மிக மோசமான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும். ஏற்கனவே வெளியான ஆவணங்களால் நிலைமை மிக மோசமாக உள்ளது என்று பென்டகன் செய்தித் தொடர்பாளர் ஜெஃப் மோரெல் குறிப்பிட்டார்.

பென்டகன் கேட்டுக்கொண்ட பின் ஆவணங்களை வெளியிடுவதில், பிடிவாதம் காட்டுவது விக்கிலீக்ஸின் பொறுப்பற்ற செயலைக் காட்டுகிறது என்று மோரெல் கூறினார்.

பொறுப்புடன் செயல்பட விரும்பினால், அவர்கள் பென்டகன் கம்பியூட்டர் மூலம் திரட்டப்பட அனைத்துத் தகவல்களையும் தங்களது இணையத்தளத்திலிருந்து அழிப்பது ஒன்றுதான் இதற்குரிய வழி என்றார்.

பென்டகனின் ஒப்புதலின்றி, ஆவணங்களை அவர்கள் வெளியிட்டால், அது அமெரிக்க இராணுவ வீரர்களிடையே மன ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தும். அத்துடன், அப்பாவி ஆப்கன் மக்களுக்கும் அது அதிர்ச்சியளிப்பதாக இருக்கும். இத்தகைய சூழலில் ஆவணத்தை வெளியிடுவது பொறுப்பற்ற செயலாகவே கருதமுடியும் என்றார் மோரெல்.

கடந்த வாரம் விக்கி லீக்ஸ் நிறுவனத்துடன் பென்டகன் அதிகாரிகள் தொடர்பு கொண்டு திரட்டப்பட்ட ஆவணங்களை அளிக்குமாறு கோரினர். ஆனால் அதை விக்கிலீக்ஸ் ஏற்கவில்லை.

இத்தகைய ஆவணங்களை வெளியிடுவது முற்றிலும் பாதுகாப்பு விதிகளை மீறிய செயலாகும். இராணுவ வீரர்கள் , வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளுக்கென வகுக்கப்பட்ட விதிகளை மீறிய செயல் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மார்க் டோனர் கூறினார்.

இது தொடர்பாக வீடியோ மூலம் செய்தியாளர்களிடம் பேசிய விக்கிலீக்ஸின் அசாஞ்ச், பென்டகனின் கோரிக்கையை ஏற்கமுடியாது என்றும் 15 ஆயிரம் ஆவணங்களை வெளியிடுவதற்கான காலக்கெடு நிர்ணயிக்கவில்லை என்றும் கூறினார். இந்த விடயத்தில் சமரசப் பேச்சுக்கே இடமில்லை என்ற அவர், புதிய ஆவணங்களை பத்திரிகைகளுக்கு சேர்ப்பது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை என்றார். (6-2)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

மஹோற்சவத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு மஞ்சத் திருவிழாவும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு கைலாசவாகன திருவிழாவும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு தண்டாயுதபாணி உற்சவமும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும், காலை 9.15 மணிக்கு சுவாமி தேரில் எழுந்தருளலும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு வசந்தமண்டபப் பூஜையும் தொடர்ந்து 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் சண்டேஸ்வரர் உற்சவமும் இடம்பெறவுள்ளது.

(6)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும்21 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 9 மணிக்கு தீ மிதிப்பு திருவிழாவும் , 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், இரவு 9 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

(6)

★ ★ ★

(கோண்டாவில்)

கோண்டாவில் குமர கோட்டம் ஸ்ரீ சித்தி வைரவர் அம்பாள் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் நண்பகல் 12 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் 27 ஆம் திகதி கும்பாபிஷேக தின சங்காபிஷேகமும் மறுநாள் பூங்காவன உற்சவமும் நடைபெறும்.

(6-3)

★ ★ ★

(பொலிகண்டி)

இருப்பை மூலை உப்புக் கிணற்றடி அருள்மிகு சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

மஹோற்சவத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 9மணிக்கு சப்பறத் திருவிழாவும் 23ஆம் திகதி மு.ப 10மணிக்கும் இரதோற்சவம், மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 5மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன.

உற்சவகாலங்களில் பண்டிதர் பொன். சுகந்தனின் மகாபாரதத்தொடர் சொற்பொழிவு இடம்பெறும் எனவும் தினமும் சொற் பொழிவின் இறுதியில் கேட்கப்படும் கேள்விக ளுக்கு சரியான பதிலளிப்போருக்கு உற்சவ இறுதி நாளன்று பரிசில் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

## இலங்கை சென்ற விவகாரம்

# சல்மான்கானின் படத்தை வாங்க தமிழக விநியோகஸ்தர்கள் தயக்கம்

நடிகர் சல்மான்கானின் 3 படங்கள் வெளியாகத் தயாராகின்ற போதிலும் அவற்றை வாங்குவதற்கு தமிழக விநியோகஸ்தர்கள் தயக்கம் காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து தெரிய வருவதாவது,

இலங்கையில் நடந்த இந்திய திரைப்பட விழாவுக்கு நடிகர், நடிகைகள் செல்லக் கூடாது என்று திரைப்பட அமைப்புடன் தடைவிதித்தது. அதை ஏற்று தமிழ் நடிகர், நடிகைகள் யாரும் செல்லவில்லை. அமிதாப் பச்சன், ஷாருக்கான், ஐஸ்வர்யாராய் போன்றோர் இலங்கை போக விரும்பினர் எனினும் எதிர்ப்புகள் கிளம்பியதையடுத்து கடைசி நேரத்தில் பயணத்தை இரத்துச் செய்தனர்.

ஆனால், சல்மான்கான் மற்றும் ஹிருத்திக் ரோஷன் இருவரும் எதிர்ப்பை பொருட்படுத்தாமல் இலங்கை சென்றார்கள். படவிழாவில் கலந்து கொண்டது மட்டுமன்றி இலங்கை அரசு அளித்த விருந்திலும் பங்கேற்றனர்.

இதையடுத்து சென்னையில் ஓடிக் கொண்டிருந்த ஹிருத்திக் ரோஷனின் கைட்ஸ் படத்தை எதிர்த்துப் போராட்டங்கள் நடந்தது. உடனடியாக அப்படங்கள் தியேட்டர்களில் இருந்து தூக்கப்பட்டன.

தற்போது, சல்மான்கான் நடித்த தபாங், பந்தா ஏ பிந்தாஸ்ஹை ,ரெடி ஆகிய 3 படங்களும் ஒன்றன்பின் ஒன்றாக வெளியிடத் தயாராகின்றன. இருந்தபோதிலும் அவற்றை வழங்குவதற்கு தமிழக விநியோகஸ்தர்கள் தயக்கம் காட்டுகின்றனர். தற்போது வெளியாகும் ரெடி படத்தில் அசின் ஜோடியாக நடித்துள்ளதுடன் இந்தப் படத்தின் படப்பிடிப்பையும் சல்மான்கான் இலங்கையில் நடத்தியது குறிப்பிடத்தக்கது. (6-2)

# சகல அடிப்படை வசதிகளுடனும் சிறுவர் நீதிமன்றம் திறப்பு

(கொழும்பு)

சிறுவர் தொடர்பான குற்றங்களை விசாரிப்பதற்கென சிறுவர் நீதிமன்றமொன்று நாளை பத்திரமுல்லையில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நீதியமைச்சின் செயலாளர் சுகத கம்லத் தெரிவித்துள்ளார்.

இந்த நீதிமன்றத்தில் நீதிபதியும் குற்றவாளி சிறுவர்களும் ஒன்றாக அமர்ந்திருந்து கலந்துரையாடல் மூலம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது பம்பலப்பிட்டியில் சிறுவர் நீதிமன்றம் ஒன்று இயங்கி வருகின்ற போதிலும் அது முழுமையானதாக இல்லை. பத்திரமுல்லையில் அமைக்கப்படுகின்ற சிறுவர் நீதிமன்றம் சிறுவர்களுக்கான சகல அடிப்படை வசதிகளையும் கொண்டதாக அமையவுள்ளது.


இங்கு நீதிபதிக்கென தனியான உயர்ந்த ஆசனமிருக்காது. நீதிபதி, வழக்கறிஞர்கள், சிறுவர்கள் ஒன்றாக அமர்ந்தே விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

சிறுவர்கள் சிறு குற்றங்களில் ஈடுபட்டிருந்தால் குறிப்பாக 5 ஆயிரம் ரூபாவுக்கு குறைவான திருட்டை அவர்கள் செய்திருந்தால் அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து சிறையிலடைப்பதற்கு பதிலாக இணக்க சபை மூலம் அதனைத் தீர்ப்பதற்கு எதிர்காலத்தில் வாய்ப்பளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

பத்திரமுல்ல பெலவத்தை ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள இணக்க சபை ஆணைக்குழுவின் கட்டடத்திலேயே புதிய சிறுவர் நீதிமன்றம் இயங்கவுள்ளது.

(6-2)

# இரண்டு தலையுடைய அதிசய ஆமை



கொழும்பு ராஜகிரிய பகுதியைச் சேர்ந்த ஒருவர் அதிசய ஆமை ஒன்றினை தெஹிவளை மிருகக் காட்சிசாலைக்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

இவ்வதிசய ஆமையின் முன் பகுதியில் இரண்டு தலைகள் , நான்கு கைகளும் பின் பகுதியில் இரண்டு கால்களும் காணப்படுகின்றன.

அதன் தலை இருக்கும் இடத்தில் ஓடு இரண்டாக பிளவுபட்டுள்ளது போல் காட்சி தருகிறது. இரண்டு தலைகளிலும் உள்ள இரண்டு வாய்களாலும் உணவு உட்கொள்ள முடியும் என மிருகக் காட்சிசாலை பணிப்பாளர் ஆனந்த லொக்குரணமுக கூறினார்.

மூன்று வாரங்கள் வயதுடைய இவ்வாமை மிருகக் காட்சிசாலை மிருக வைத்திய பிரிவில் வைக்கப்பட்டுள்ளது. (6-2)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

15-08-2010 (ஞாயிறு)

எமது நண்பி திருமதி யோகராஜா ஜெஸ்ரின் கிறேஸ் அவர்களின் அன்புத்தாயார்

சவிரிமுத்து கத்தரீன் அம்மா

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, அன்னாரது ஆத்துமா சாந்தி அடைய நாமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயருறும்

அருட்பிரகாசம் குடும்பம்(சாந்தி)

மதீஸ் குடும்பம் (ஜெயந்தி)

J/433, கட்டைக்காடு,
முள்ளியான், யாழ்ப்பாணம். (2171)

# பலாலியில் சர்வதேச விமானத்தளம் இந்தியா அமைக்க இலங்கை இணக்கம்

(டெல்லி)

இந்திய விமான சேவை அதிகார சபை இலங்கையில் சர்வதேச விமான நிலையம் ஒன்றை நிர்மாணிக்கத்திட்டமிட்டுள்ளதுடன் இதற்காக விமானப்படையின் பொறுப்பில் உள்ள பலாலி விமானத்தளத்தை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் இணங்கியுள்ளது.

இந்திய விமானசேவை அதிகார சபை பலாலி விமானத்தளத்தை விரிவு படுத்தவுள்ளது. இதற்கான அடிப்படை ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக இந்திய விமான சேவை அதிகார சபையின் தலைவர் பி.பி. அகர்வால் தெரிவித்திருந்தார்.

இந்தத் திட்டத்தின் ஆரம்பக்கட்ட பணிகளுக்காக 400 கோடி முதல் 500 கோடி ரூபாய் வரை செலவாகும் என எதிர் பார்க்கப் படுகிறது. இந்திய விமானசேவை அதிகார சபை பலாலி விமானத்தளம் தொடர்பாக அடிப்படை ஆய்வறிக்கையை தயாரித்துள்ள போதிலும் அவர்களுடன் அரசாங்கம் இது வரை எவ்விதமான உடன்படிக்கைகளிலும் கையெழுத்திடவில்லையென பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

பலாலி விமான நிலைய பிரதேசத்தில் சுற்றுலா வலயத்தை ஏற்படுத்துவது தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடபகுதியின் பிரதான பாதுகாப்புத்தலைமையகமான பலாலி பாதுகாப்புப்படைகளின் தலைமையக முகாமை அங்கிருந்து அகற்றுவதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பலாலி விமான ஓடுதளம் 1.7 கிலோ மீற்றர் நீளமானது. அதியுயர் பாதுகாப்பு வலயமான அந்தப் பிரதேசம் 25 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளது. இதற்கு முன்னர் பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா இலங்கை பிரதமர் ஆகியோரிடையில் கடந்த ஏப்ரல் மாதம் விசேட பேச்சுவார்த்தை ஒன்று நடை பெற்றது.

வடபகுதியில் எதிர்காலத்தில் ஸ்தாபிக்கப் படவுள்ள சுற்றுலா வலயத்துக்கு பலாலி பாதுகாப்புப் படைகளின்தலைமையகம் தடையாக இருக்கும் என இந்தியப் பிரதிநிதிகள் இராஜதந்திர பேச்சுவார்த்தை ஒன்றின் போது இலங்கை பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ந-5)

## சரத் பொன்சேகாவுக்கு அதி உச்ச தண்டனை வழங்குக


### கோத்தபாய ஆவேசம்

இராணுவத்தில் ஒழுக்கத்தை பாதுகாக்க வேண்டுமாயின் சரத் பொன்சேகா செய்த தவறுகளுக்கு தண்டனை வழங்கப்படவேண்டும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொன்சேகா தேசிய பாதுகாப்பை ஆபத்தில் தள்ளியதாகவும் அந்தத்தவறை சாதாரண தவறாக கணிக்க முடியாதெனவும் அவர் கூறியுள்ளார். முப்படைகளுக்கும் பொறுப்பான அதிகாரியாகவும் தேசியப் பாதுகாப்புத் தொடர்பில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுடன் சம்பந்தப்பட்டவர் என்ற வகையிலும் பாதுகாப்புச்சபையின் உறுப்பினர் உள்ளிட்ட பல பொறுப்புக்களை வகித்த அரச அதிகாரி என்ற நிலையில் அரசாங்கத்தை கவிழ்க்க சதித்திட்டம் தீட்டியவர்களுக்கு உதவியதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவரது செயற்பாடு ஜனாதிபதியையும் அமைச்சரவையையும் அழிப்பதற்காகமேற்கொள்ளப்பட்ட முயற்சியாகும்.

இப்படியான அதிகாரிகளின் செயற்பாடுகளை நியாயப்படுத்த முடியாது. சரத் பொன்சேகா செய்த குற்றங்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். சரத் பொன்சேகாவின் சகல பதவிகளும் பறிக்கப் படவுள்ளநிலையில் அவர் தற்போது சாதாரண நபர் எனவும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ந-5)

# வீறுகொண்டெழுந்தார் இராகுலன் கொக்குவில் இந்து சாதனை வெற்றி



(மன்னார்)

இராகுலன் விஷ்வரூபம், பங்குஜன், சிலோஜன் ஓட்ட மழை குவிப்பு மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியினை சாதனை வெற்றி கொண்டது கொக்குவில் இந்துக் கல்லூரி.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் ஏற்பாடு செய்த யாழ். மாவட்ட பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவுக் கிரிக்கெட் அணிகள் பங்கு பற்றிய 50 ஓவர்கள் மட்டுப் படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளில் முதல் சுற்றுப் போட்டிகள் கடந்த மாதத்துடன் நடைபெற்று முடிந்தன.

முதல் சுற்றிலிருந்து இரண்டுபிரிவாக 6 அணிகள் யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டு தேசிய ரீதியிலான போட்டிகளில் விளையாடுகின்றன.

ஒரு பிரிவில் யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய அணிகளும் மற்றைய பிரிவில் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகிய அணிகளும் விளையாடுகின்றன.

மேற்படி இரண்டாம் சுற்றில் மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரியினை எதிர்த்து மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற கொக்குவில் இந்துக்கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது. ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய சிலோஜன்-பங்குஜன் ஜோடி ஆரம்ப அடித்தளத்தை திடமாக இட்டனர்.

சிலோஜன் 44 ஓட்டங்களை பெற்ற வேளை ஆட்டமிழந்தார். இரண்டாவது விக்கெட்டுக்காக பங்குஜனுடன் ஜோடி சேர்ந்த இராகுலன் அதிரடியாக ஆடினார்.

சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியின் பந்து வீச்சுக்களை நாலாபுறமும் சிதறடித்தனர். ஒவ்வொரு ஓவரிலும் ஓட்ட எண்ணிக்கை 9க்கும் அதிகமாக சென்றது.

பங்குஜன், இராகுலன் அடுத்தடுத்து சதம் கடந்தனர். பங்குஜன் 122 பந்துகளில் 143 ஓட்டங்களை எடுத்த வேளை ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய ஆதித்தன் இராகுலனுடன் இணைந்து ஆடினார்.

இந் நிலையில் 75 பந்துகளில் 131 ஓட்டங்களைப் பெற்றிருந்த இராகுலன் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய வீரர்களுடன் இணைந்து ஆதித்தன் அதிரடியாக ஆடினார். எனினும் 4 ஓட்டங்களால் சதம்பெறும் வாய்ப்பினை இழந்து 96 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆதித்தன் இவ் ஓட்ட எண்ணிக்கையை 46 பந்துகளில் விளாசினார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 525 ஓட்டங்களைக் குவித்தது. திவாகர், சஞ்சீப் இறுதிவரை ஆட்டமிழக்காமல் முறையே 29,22 ஓட்டங்களுடன் களத்திலிருந்தனர்.

பதிலுக்கு 526 என்ற இமாலய வெற்றியிலக்கினை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக்களமிறங்கிய மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி அணி இராகுலனின் பந்து வீச்சினை எதிர்கொள்ள முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுக்களையிழந்தது.

இறுதியில் மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி 94 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையுமிழந்து 431 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் பதுசனன் 33 ஓட்டங்களையும் சுரேந்திரன் 12 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியின் இராகுலன் 6 விக்கெட்டுக்களையும், பங்குஜன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

இலங்கை பாடசாலைகளின் 17 வயது பிரிவு அணிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி பெற்ற ஓட்ட எண்ணிக்கையான 525 ஓட்டங்களே 50 ஓவர் கிரிக்கெட் வரலாற்றில் பெறப்பட்ட அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகும்.

# ஒருநாள் போட்டிக்கு புதிய விதிகள் கிரிக்கெட் அவுஸ்திரேலியா அறிமுகம்

(மெல்போர்ன்)

இருபது-20 கிரிக்கெட் போன்று ஒருநாள் போட்டிகளில், விறுவிறுப்பை அதிகரிக்கும் வகையில் கிரிக்கெட் அவுஸ்திரேலியா (சி.ஏ.,) புதிய விதிகளை அறிமுகம் செய்கிறது.

இருபது-20 போட்டிகளின் வருகைக்குப் பின் ஒரு நாள் போட்டிகளின் மீதான எதிர்பார்ப்புக் குறைந்து வருகிறது. இதற்கு புத்துணர்ச்சி அளிக்கவும் அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தும் வகையில் புதிய விதிகளை அறிமுகம் செய்ய சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) முயற்சித்து வருகிறது.

இதனிடையே தங்கள் வீரர்கள் எதிர்பார்ப்பையும் மீறி சி.ஏ., புதிய விதிகளை உள்ளூர் தொடரில் அறிமுகம் செய்துள்ளது. இதன்படி 50 ஓவர்களுக்குப் பதில் 45 ஓவர்கள் கொண்டதாக நடத்தப்படும் இந்தப் போட்டி 4 இன்னிங்ஸ்களாக (20, 25 ஓவர்) பிரிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் பகலிரவு போட்டிகளின் முடிவு இரு அணிகளுக்கும் சாதகமாக வாய்ப்புள்ளது.

இது குறித்து சி.ஏயின் முக்கிய தலைமை அதிகாரி ஜேம்ஸ் சுதர்லாந்து கூறுகையில்,

டெஸ்ட், ஒருநாள் மற்றும் இருபது-20 என மூவித கிரிக்கெட்டிலும் புதிய விதிகளைக் கொண்டுவர வேண்டும் என ரசிகர்கள் விரும்புகிறார்கள். சோதனை முயற்சியாக ஒருநாள் கிரிக்கெட்டில் தற்பொழுது அறிமுகம் செய்கிறோம் என்றார்.

இதனிடையே புதிய விதிகளால் 2011இல் இந்திய துணைக்கண்டத்தில் நடக்கும் உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கு தயாராவதில் பாதிப்பு ஏற்படும் என மைக்கெல் ஹசி உள்ளிட்ட மூத்த வீரர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

**புதிய விதிகள்**

- இரு அணியிலும் 12 வீரர்கள் விளையாடலாம். இது துடுப்பாட்டத்துக்கு 11, களத்தடுப்பிற்கு 11 வீரர்களாக தேர்வு செய்து கொள்ளலாம்.
- ஒவ்வொரு இன்னிங்ஸ் ஆரம்பமாகும் போது புதிய பந்து பயன்படுத்தப்படும்.
- ஓவருக்கு இரண்டு பந்து வீச்சாளர்கள் அனுதிமதிக்கப்படும்.
- களத்தடுப்பின் போது முதல், 5,6,20, 21,25,26 மற்றும் 45ஆவது ஓவர்களின் போது இரு வீரர்கள் உள்வட்டத்துக்கு வெளியே நிற்க வேண்டும்.
- டெஸ்ட் போட்டி போல் இரு அணிகளும் தலா இரண்டு இன்னிங்ஸ் விளையாட வேண்டும் இது தலா 20, 25 ஓவர்கள் கொண்டதாக இருக்கும்.
- முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெறும் அணி போட்டியில் தோற்றாலும் ஒரு புள்ளி பெறலாம். வெற்றி பெறும் அணிக்கு 4 புள்ளிகள் கிடைக்கும்.
- முதல் இன்னிங்ஸில் முன்னிலையுடன் வென்றால் 5 புள்ளி கிடைக்கும்.

# திருவெண்காட்டில் இன்று கொடியேற்றம்

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய கொடியேற்றம் இன்று முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெறும்.

தொடர்ந்து பத்து நாள்கள் மஹோற்சவம் இடம்பெறும். சிவஸ்ரீ சி.விவஸ்வதமூர்த்திக் குருக்கள் பிரதம குருவாக இருந்து மஹோற்சவத்தை நடத்தி வைப்பார். (ந)

# திருமலை நகரசபை தலைவர் பதவி நீக்கம்

(திருகோணமலை)

திருகோணமலை நகரசபைத் தலைவர் எஸ்.கௌரிமுகுந்தனைக் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பணி நீக்கம் செய்துள்ளார். உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நகர சபைத் தலைவருக்கு எதிராக மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனினும் இதனை கௌரிமுகுந்தன் மறுத்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் நீதிமன்றத்தின் உதவியைத் தாம் நாடவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)


புதியபிரிவுகள் ஆரம்பம்

Advanced Dip. in Video mixing
Morph
Cool3d
Project
Premiere
Soundfroge
Combustion
Power director
Vcd and convertor
Editing using Photoshop
Auto CAD
ICT(O/L) (தரம் 10 & 11)
ICT(A/L) (தரம் 12 & 13)
GIT(A/L) (தரம் 12 & 13)
Ms Office2007 & DTP
Internet & Email
BIT, AAT, ACBF
Accounting Package
Computer Hardware
Programming Languages
Kids Programme (தரம் 01→09வரை)
Group Classes

CHARLES BABBAGE COMPUTER ACADEMY CBCA SRI LANKA

முழுமையான கணணிக் கல்விக்கு இன்றே எம்முடன் இணையுங்கள்...

CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903


# இன்றைய ஆட்டங்கள்

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் அழைக்கப்பட்ட யாழ்.மாவட்ட முன்னணிக் கழகங்களுக்கிடையில் நடைபெறும் அணிக்கு 7 பேர் கொண்ட உதை பந்தாட்டப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் பிற்பகல் 4 மணிக்கு ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம், சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ந-5)

# மீள்குடி...

குடியேறியவர்களுக்கும் இந்தக் கொடுப்பனவுத் தொகை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி இடம்பெயர் முகாமிலிருந்து மீள்குடியேறுவதற்குச் செல்லும் குடும்பங்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் பணமும் 16 கூரைத் தகடுகளும் ஆறு மாத காலத்திற்கான உலர் உணவுப் பொருள்களும் விவசாய மற்றும் சமையல் அறை உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. (ந-6,2)

# வடக்கு மாகாண அலுவலகங்...

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்ட பின்னரும் வடக்கு மாகாணத்தின் நிர்வாகப் பணிகள் திருகோணமலையிலேயே இயங்கி வருகின்றன.

இந் நிலையில் வடக்கு மாகாண நிர்வாகப் பணிகளைக் கிளிநொச்சியிலும் மாங்குளத்திலும் இயங்க வைப்பதற்கு வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி நடவடிக்கை எடுத்திருந்தார்.

இதற்காகக் கிளிநொச்சி அறிவியல் நகரில் விடுதலைப்புலிகளால் அமைக்கப்பட்டிருந்த பல்கலைக்கழகக் கட்டடம் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வடக்கு மாகாண அலுவலகங்களைக் கிளிநொச்சி மற்றும் மாங்குளத்திற்குக் கொண்டு செல்வதை இடைநிறுத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமையவே ஜனாதிபதி இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாண அலுவலகங்களைக் கிளிநொச்சி மற்றும் மாங்குளத்தில் இயங்க வைப்பதன் மூலம் சர்வதேச சமூகத்தின் உன்னிப்பான பார்வை அங்கு உருவாகும் எனவும் அது அரசுக்கு எதிரான பிரசாரத்திற்கு சாதகமாக அமையலாம் எனவும் நம்பப்படுவதாலேயே இவ் அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந-5)

# கனடாவில்...

டிக்கை எடுக்கப்படும்.

இந்தப் புகலிடக் கோரிக்கையாளர்களில் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் ஊடுருவியிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் கடந்த 90 நாள்கள் எம்.வி. சன் சீ கப்பலின் மூலம் பயணம் செய்து கனடாவை அடைந்துள்ளனர்.

கைவிரல் அடையாளம் பதிவு செய்யப்பட்டுப் புகைப்படம் எடுக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கப்பலில் சிறுவர்களும் பயணித்துள்ளனர். கப்பலில் பயணித்த சிலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

# தமிழ்க் கட்சிகளின்...

ஏற்கனவே இந்த அரங்கம் 4 தடவைகள் கொழும்பில் கூடி பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்துள்ளன. இந்த நிலையில் இன்றைய கூட்டத்திற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சமுகந்தரும் என்ற எதிர்பார்ப்பில் மட்டக்களப்பில் அது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும் இக் கூட்டத்தில் கூட்டமைப்புப் பங்கேற்கவில்லை. வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகம் மற்றும் தமிழர்களின் சுயநிர்ணயம் என்பவற்றைத் தமிழ்க் கட்சிகள் ஏற்றுக் கொண்டால் மாத்திரமே அரங்கத்தில் பங்கேற்க முடியும் எனத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புத் தெரிவித்து வருகின்றது.

எனினும் பல்வேறு முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் இந்தக் கூட்டத் தில் பங்கேற்று ஆராய முடியும் எனத் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தின் சார்பில் கருத்துரைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். (ந-5)




கலைமகள் அழகு நிலா

பயிற்சி நிலையம்

ஏழு நாட்கள் பயிற்சிகள் இடம்பெற்று பயிற்சியின் நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். இப் பயிற்சியின் மூலம் ஒரு அழகு நிலையம் நடாத்தும் திறமையைப் பெற்றுக் கொள்ளலாம். இப் பயிற்சி கற்றுக் கொள்வது இலகுவானதும் அதிக வருமானம் தரக் கூடிய தொழிலாகும். பெண்களுக்கு மிக அவசியமானது. வயதெல்லை கிடையாது. கீழ் வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன்முறையாகும்.

பயிற்சிகள்

★ Facial (ஏழு வகை)
★ Threading
★ Pimple Treatment
★ Waxing
★ Hair Stratening (2 வகை)
★ Hair Perming (2 வகை)
★ Hot oil Massage
★ Hair Cutting
★ Hair dye
★ Hair Colouring
★ Pedeicure Manicure
★ கறுப்புக் காய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்
★ Bleaching
★ Bridal make up (6 வகை)

தொடர்புகள்: 077 3719071 021 4908151

பயிற்சிக் கட்டணம்:- 4000/=
பயிற்சி ஆரம்பம் :- 19/08/2010
பயிற்சி நேரம் :- 9 மணி - பி.ப.4 மணி வரை

கலைமகள் அழகுநிலா
390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.

(C-874)


# மரண அறிவித்தல்

## திருமதி தங்கரத்தினம் கந்தசாமி



உடுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் கந்தசாமி (13.08.2010) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னாள் அதிபரும் உடுவில் பகுதி முன்னாள் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளருமாகிய அ.கந்தசாமியின் பிரியபத்தினியும், உடுவில் பகுதி முன்னாள் பொலிஸ் விதானையார் சின்னையா-மாணிக்கம் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும், வட்டுக்கோட்டை காலஞ்சென்ற அருணாசலம்-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அருமை மருமகளும், திருமதி கௌரி சிவராஜசுந்தரம் (ஓய்வுபெற்ற ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி), சிவாஜி (Former Principal, J/Skandavarodaya College, Visiting Lecturer, Advanced Technological Institute, Jaffna, Palay Teacher's College, Under Graduate Department, Jaffna College) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவராஜசுந்தரம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), கருணாதேவி சிவாஜி (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

மாதுமை (A/L-ஸ்கந்தவரோதயக் கல்லூரி), சாம்பவி (A/L-உடுவில் மகளிர் கல்லூரி), ஆரமுதன் (Gr-09, ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற தில்லைமலர்-பசுபதியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி) அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பசுபதி (முன்னாள் பிரதம கணக்காளர், சுங்க இலாகா), பரமசாமி (முன்னாள் ஆசிரியர்), திருமதி பாக்கியம் இராசையா ஆகியோரின் அன்பு மைத்துனியும்,


சகலகலாவல்லி கருணாகரன் (Canada), சித்திரகலா லோகேஸ்வரன் (New-zealand), உமாசுதன் (Accountant, Australia), சிவசக்திரூபன் (Canada) ஆகியோரின் அன்புப் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் உடுவில் மேற்கு உடுவிலில் உள்ள அவரின் 'சிவை' இல்லத்தில் இன்று (15.08.2010) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் இணுவில் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'சிவை' உடுவில் மேற்கு,
உடுவில்.

தகவல்:
க.சிவாஜி
(முன்னாள் அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

(2172)


திருமுருகன் கொம் நெற்
→ 259, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
→ 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
→ 44, மில் றோட், வவுனியா.
→ 05, திருநகர் வீதி, கிளிநொச்சி.

DHL WORLDWIDE EXPRESS

திருமுருகன் கொம் நெற்

உலக நாடுகளுக்கு ஆகாய கடல் வழி மார்க்க பொதிகள் சேவை

உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்

குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிக்கான தபால்கள் பொதிகள் சேவை (சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)

DHL விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை DHL

நாட வேண்டிய முகவரி

259 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்

லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை

TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06

46. ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
பிரதான வீதி, நெல்லியடி
5. திருநகர் வீதி, கிளிநொச்சி
44. மில் றோட், வவுனியா

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம் பெறும்


இப்பத்திரிகை வலம்புரி அச்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.